தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இபேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI Volume- 3 Issue:215 19-02-2026 வியாழக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

19.02.2026 மாசி 7
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.33

திதி:
இன்று மாலை 5.12 வரை துவிதியை பின்பு திரிதியை.

நட்சத்திரம்:
இன்று இரவு 10.03 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

யோகம் :
இன்று இரவு 9.53 வரை சித்தம் பின்பு சாத்தியம்.

கரணம் :
இன்று அதிகாலை 5.39 வரை பாலவம் பின்பு மாலை 5.12 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.32 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 10.03 வரை ஆயில்யம் பின்பு மகம்.

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

இன்று ரம்ஜான் முதல் தேதி.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி: நிறைவேற்றி காட்டுவோம்

## அரசியலமைப்பு சட்டத்தை திருத்த வேண்டும்: சட்டசபையில் ஸ்டாலின் பேச்சு

**சென்னை, பிப்.19:**
அனைத்து அதிகாரங்களையும் மத்திய பா.ஜ.க. அரசு கபளீகரம் செய்கிறது. கவர்னர்கள் மூலம் மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுக்கிறது. இந்த நெருக்கடிகளில் இருந்து மீள ஒரே மருந்து மாநில சுயாட்சி தான் என்று சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார். 2026 2027 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டை நேற்று அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். இதையடுத்து வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

இதன் தொடர்ச்சியாக, தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட் மீதான விவாதம், நேற்று சட்டப்பேரவையில் நடைபெற்றது. அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசும்போது, "முன்னாள் முதல்வர் அண்ணா, தனது இறுதி உயிர் போல எழுதியது தான் மாநில சுயாட்சி கொள்கை. அவரது மறைவுக்குப் பிறகு மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக கருணாநிதி வடிவமைத்து கொடுத்தார்.

மத்திய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை சட்டப்பேரவையில் வைக்க இருக்கிறோம். ஒன்றிய அரசிடம் இருந்து உரிமைகளை பெற இன்னமும் போராடும் நிலை உள்ளது; எல்லாவற்றுக்கும் மாநில அரசுகள் ஒன்றியத்தின் தயவை எதிர்பார்த்துள்ள நிலைதான் உள்ளது.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள மத்திய அரசு மாநில அரசுகளை மதிப்பது இல்லை. இன்னும் எத்தனை காலங்கள் அவர்கள் கொடுக்கும்



இடத்திலும், நாம் வாங்கும் இடத்திலும் இருப்பது. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்க வேண்டும். கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும்.மாநில சுயாட்சி வேண்டும், மத்தியில் கூட்டாட்சி மலர வேண்டும். இது தனிப்பட்ட அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல, இந்திய மக்களின் வாழ்வியல் கோரிக்கை. பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சி தான் அடிப்படை. இதைத் தான் அந்த அறிக்கையும் நிறுவுகிறது. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும்.

கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. எனவே, நாம் முயன்றால் மீண்டும் திருத்த முடியும். இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் முயற்சியைத் தொடங்க வேண்டும். அதிகாரமும் வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது, பரவலாக வேண்டும். கூட்டாட்சி தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்பை மாற்றுவது மத்திய அரசை பலவீனப்படுத்தாது என்று அறிக்கை கூறுகிறது. ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அதிகாரங்களை கபளீகரம் செய்கிறது மத்திய அரசு.

மாநிலங்களவை மற்றும் மக்களவையில் இந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயக சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள். எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும். மாநில சுயாட்சிக்கான முன்னெடுப்பை நாம்தான் செய்ய வேண்டும். நம்மைவிட்டால் செய்ய யாரும் இல்லை. இது வரலாறு வழங்கி இருக்கும் வாய்ப்பு" இவ்வாறு முதல்வர் பேசினார்.

## அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

**சென்னை, பிப்.19:**
இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக சென்னை வானிலை மையம் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், "நேற்று முன்தினம் (16-02-2026) பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து நேற்று (17-02-2026) காலை 8.30 மணி அளவில் பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவியது. இது மேலும் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் (18-02-2026) வலுப்பெறக்கூடும் என்று தெரிவித்திருந்தது.

## மாநிலங்களவைத் தேர்தல் தேதி அறிவிப்பு! தமிழ்நாட்டில் காலியாகும் 6 இடங்கள்!!

**புதுடில்லி, பிப்.19:**
மாநிலங்களவைத் தேர்தலுக்கான தேதியை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் புதன்கிழமை வெளியிட்டுள்ளது.

நாட்டில் தமிழகம், மேற்கு வங்கம் உள்பட 10 மாநிலங்களில் 37 இடங்களுக்கான மாநிலங்களவைத் தேர்தல் வருகிற மார்ச் 16 ஆம் தேதி நடைபெறும் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழகத்தில் 6 இடங்கள் காலியாகின்றன.

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்கம், அஸ்ஸாம், பிகார், சத்தீஷ்கர், ஹரியாணா, ஹிமாசலப் பிரதேசம், தெலகானா உள்ளிட்ட இடங்களில் மொத்தமாக 37 இடங்கள் காலியாகின்றன. இதில், 17 எம்பிக்கள் பதவிக்காலம் ஏப்ரல் 2 ஆம் தேதியும், மீதமுள்ள 20 எம்பிக்களின் பதவிக்காலம் ஏப்ரல் 4 ஆம் தேதியும் நிறைவடைகிறது.

தமிழ்நாட்டில் உள்ள மாநிலங்களவை எம்பிக்கள் என். ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, தம்பிதுரை, ஜி.கே. வாசன், பி. செல்வராசு உள்ளிட்டோரின் பதவிக்காலம் ஏப்ரலில் நிறைவடையவுள்ளது.

மகாராஷ்டிரத்தில் டாக்டர் பகவத் கிஷன்ராவ் கான், டாக்டர் பௌசியா தஹ்சீன் அகமது சதுர்வேதி, பிரியங்கா விக்ரம் பவார், சரத்சந்திர கோவிந்தராவ் பாட்டீல், தைரியஷில் மோகன் பாட்டீல், ரஜனி சோக்ராவ் அத்வாலே, ஒடிசாவில் மம்தா மோகந்தா, முசிபுல்லா கான், சுஜீத் குமார், நிரஞ்சன் பிஷி, மேற்கு வங்கத்தில் சகேத் கோகலே, ரிதாப்ரதா பானர்ஜி, விகாஷ் ரஞ்சன் பட்டாச்சார்யா, மௌசம் நூர், சுப்ரதா பாஷி, அஸ்ஸாமில் ராமேஷ்வர் தெலி, புவனேஷ்வர் காலிதா, அஜித்குமார் பூயான், பிகாரில் அமரேந்திர தாரி சிங், பிரேம் சந்த் குப்தா, ராம்நாத் தாக்குர், உபேந்தர குஷ்வாகா, ஹரிபன்ஷ் நாராயண் சிங், சத்தீஷ்கரில் கவி தேஜ்பால் சிங் துளதி, பூலோ தேவி நேதம், ஹரியாணாவில் கிர்ண் சௌதரி, ராம் சந்தர் ஜங்காரா, ஹிமாசலப் பிரேதசத்தில் இந்து பாலா கோஸ்வாமி, தெலங்கானாவில் டாக்டர் அபிஷேக் மனு சிங்கவி, சுரேஷ் ரெட்டி உள்ளிட்டோரின் பதவிக்காலம் நிறைவடையவுள்ளது.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான அறிவிப்புகள் வருகிற பிப். 26 ஆம் தேதி வெளியாகிறது. அதைத் தொடர்ந்து மார்ச் 5 ஆம் தேதி வேட்புமனுக்கள் தாக்கலுக்கான கடைசி நாளாகும். மார்ச் 6 ஆம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. வேட்பு மனுவைத் திரும்ப பெற மார்ச் 9 ஆம் தேதி கடைசி நாள்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மார்ச் 16 ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து அன்று மாலையே வாக்கு எண்ணிக்கையும் நடைபெறவுள்ளது.

சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ்நாட்டில் திமுக சார்பில் 4 எம்.பிக்களையும், அதிமுக சார்பில் 2 எம். பிக்களையும் தேர்வு செய்ய முடியும்.

## அடுத்த மாதம் 3 முறை தமிழகம் வரும் பிரதமர் மோடி

**சென்னை, பிப்.19:**
தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

தமிழக சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தவெக, நாம் தமிழர் என 4 முனை போட்டி நிலவ வாய்ப்பு உள்ளது.

அதிமுக கூட்டணியில் பாஜக, பாமக (அன்புமணி அணி), தமாகா,இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, புரட்சி பாரதம், பெருந்தலைவர் மக்கள் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. கூட்டணியில் சேர தேமுதிக, புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள பிரதமர் மோடி அடுத்த மாதம் 3 முறை தமிழகம் வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, அடுத்த மாதம் 1ம் தேதி மதுரையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

இதனை தொடர்ந்து 6ம் தேதி வேலூரிலும், 11ம் தேதி திருச்சி, தஞ்சாவூரிலும் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் பிரதமர் மோடி அதிமுக தலைமையிலான கூட்டணியை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

# பிரதமர் மோடியுடன் கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை சந்திப்பு

**புதுடெல்லி, பிப்.19:**
பிரதமர் நரேந்திர மோடியை, கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.



டெல்லியில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தாக்க உச்சிமாநாடு கடந்த 16-ம் தேதி தொடங்கியது. வரும் 20-ம் தேதி வரை இந்த மாநாடு நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக இந்தியா வந்துள்ள சுந்தர் பிச்சை, இன்று (பிப்.18) பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அவருடன் கூகுள் உயர் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முன்னதாக சுந்தர் பிச்சை அளித்த பேட்டியில், "நாங்கள் மிகத் தெளிவான செய்தியுடன் வருகிறோம். நாங்கள் இந்தியாவுடன் ஒரு கூட்டாளியாக இருக்க விரும்புகிறோம். செயற்கை நுண்ணறிவு உடன் இந்தியாவுக்கு அசாதாரணமான பாதை மற்றும் வாய்ப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த மாற்றத்துக்குத் தேவையான உள்கட்டமைப்புகள், அவற்றை இயக்குவதற்குத் தேவையான ஆற்றலில் முதலீடு செய்தல், தரவுத் தொகுப்புகளை வழங்குதல், உள்ளூர் கூட்டாளர்களுடன் ஆராய்ச்சி நடத்துதல், இந்தியாவின் திறமைகளுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல் என எங்கள் பங்கு முழு அளவில் இருக்கும். இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு லட்சியங்களுக்கு கூகுள் நீண்டகால அடிப்படையில் ஒத்துழைப்பை வழங்கும்" என தெரிவித்தார்.

முன்னதாக சுந்தர் பிச்சை வெளியிட்ட எக்ஸ் பதிவில், "செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா திரும்பியதில் மகிழ்ச்சி. எப்போதும் போல அன்பான வரவேற்பு இருந்தது. ஆவணங்களும் சிறப்பாக இருந்தன" என குறிப்பிட்டுள்ளார்.

இந்த உச்சி மாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறை நமது நாட்டின் சேவை மற்றும் ஏற்றுமதிக்கு முதுகெலும்பாகவும் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாகவும் இருந்து வருகிறது. இந்த துறைக்கு செயற்கை நுண்ணறிவு ஒரு மகத்தான சவாலையும் வாய்ப்பையும் முன்வைக்கிறது.

செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் அவுட்சோர்சிங் அலைகளால் இந்தியாவின் ஐடி துறை 2030-ம் ஆண்டுக்குள் 400 பில்லியன் டாலர்களை எட்டும் என்று ஏஐ சந்தை கணிப்புகள் தெரிவிக்கின்றன" என தெரிவித்துள்ளார்.

உலகளாவிய தெற்கில் நடத்தப்படும் முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு தற்போது புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. 'அனைவருக்கும் நலன்; அனைவருக்கும் மகிழ்ச்சி' என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப மனித குலத்துக்கான செயற்கை நுண்ணறிவை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என்ற செய்தியை இந்த உச்சி மாநாடு கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இந்த உச்சி மாநாட்டில் 110க்கும் மேற்பட்ட நாடுகள், 30 சர்வதேச நிறுவனங்கள், 45 நாடுகளின் அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL
WITH Hi
TO
tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY
NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-535

முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும்



வரும் இடையூறுகளை முன்னே அறிந்துக் காக்காமல் மறந்து சோர்ந்தவன், பின்பு அவை வந்துற்றபோது தன் பிழையை நினைத்து இரங்குவான்.

## சிந்திக்க ஒரு நொடி



உலகத்திலேயே மிகவும் எளிதானது பிறரிடம் உள்ள குறையை காண்பது.....

உலகத்திலேயே மிகவும் கடினமானது நம் குறையை நாமே உணர்ந்து கொள்வதுதான்...

**உஷா முத்துராமன்**

## பாதயாத்திரை



மகாத்மா காந்தி100 நாள் வேலை உறுதி சட்டத்தை சீர்குலைக்கும் மோடி அரசை கண்டித்து சென்னையில் நடைபெற்ற பாதயாத்திரை நடைபெற்றது. இதில் தலைமை ஏற்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வ பெருந்தகை MLA இதில் கலந்து கொண்டவர்கள் திருkc வேணுகோபால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவி திருமதி மதுரம்மா கனிBAதிரு பாரூக் TV துரைராஜ் PCC சர்க்கிள் தலைவர் ஆர் கே நகர் சையத் இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் தீபக் திரு ஜீவா திரு ராமச்சந்திரன் திரு வெங்கடேஷ் திருமதி ஊர்மிலா திரு வெங்கடேஷ் திரு ரகு திரு கருப்பசாமி திரு சக்திவேல் M மோகன் குமார்

## செஞ்சியில் நுகர்வோர் தின உறுதிமொழி





விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இயங்கிவரும் APJ அப்துல்கலாம் IAS அகாடமில் டிசம்பர்24 தேசிய நுகர்வோர் தினம் மற்றும் மார்ச்15 உலக நுகர்வோர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நுகர்வோர் தின உறுதிமொழியை பயிற்சி மாணவர்கள் அனைவரும் எடுத்துக் கொண்டனர் இந்நிகழ்ச்சியில் சமூக சேவகரும் சிறப்பு வருவாய் ஆய்வாளருமான கண்ணன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு நுகர்வோர் தின விழிப்புணர்வு சிறப்புரை ஆற்றினார். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## ருத்ர நாட்டியாஞ்சலி - 2026



**மயிலாடுதுறை , பிப், 19 :** மயிலாடுதுறை மாவட்டத்தில் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாவடுதுறை ஸ்ரீ ஒப்பிலாமுலையம்மை உடனாய ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் திருக்கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் 10 ஆம் ஆண்டு ருத்ர நாட்டியஞ்சலி சிறப்பாக நடை பெற்றது. இந்த நிகழ்வில் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார் மற்றும் லயன் மகாவீர் ஜெயின், வணிக சங்க கூட்டமைப்பபு பொறுப்பாளர்கள், லயன்ஸ் சங்க உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பு செய்தனர்.

## திசையன்விளை மனோ கல்லூரியில் சிறப்பு வாக்காளர் பட்டியல் சேர்ப்பு முகாம்



**திசையன்விளை, பிப்.19:** திசையன்விளை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் நாட்டு நல பணி திட்டம் சார்பில் "சிறப்பு வாக்காளர் பட்டியல் சேர்ப்பு முகாம்" நேற்று சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் லில்லி அவர்களின் ஆலோசனையின் பேரில், திசையன்விளை தாலுகா வருவாய் ஆய்வாளர் கோமதிநாயகம் மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர் (தேர்தல்) ஐயப்பன் ஆகியோர் தலைமையில் இந்த முகாம் நடத்தப்பட்டது. 18 வயது நிறைவடைந்த மாணவ, மாணவிகளுக்கு புதிய வாக்காளர்களாக பதிவு செய்வது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், ஆன்லைன் முறையில் விண்ணப்பிப்பது தொடர்பான வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது.

இந்த முகாமில் மொத்தம் 23 மாணவர்கள் புதிய வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் வணிகவியல் துறைத் தலைவர் ஒயிட்டன் சகாயராஜ், தமிழ் துறைத் தலைவி தணிகை செல்வி, கணிதவியல் துறைத் தலைவர் மகேந்திரன், பேராசிரியர்கள் முருகன், ராமபாண்டி ஆகியோர் கலந்து கலந்து கொண்டனர்.

முகாம் சிறப்பாக நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் பலவேச கிருஷ்ணன் மேற்கொண்டிருந்தார்.

இம்முகாம் மூலம் இளம் தலைமுறையினருக்கு வாக்குரிமையின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டதுடன், ஜனநாயகப் பொறுப்புணர்வை வளர்க்கும் ஒரு பயனுள்ள நிகழ்வாக அமைந்தது.

## மயான கொள்ளை திருவிழாவை முன்னிட்டு வேலூர் மக்கான் டாக்டர் அம்பேத்கர் நகரில் அன்னதானம்!



**வேலூர், பிப். 19:** மயான கொள்ளை திருவிழா நடந்து விமரிசையாக நிறைவு பெற்றதை தொடர்ந்து புதன்கிழமை நண்பகல் 12 மணி அளவில் ஏ.பிச்சமுத்து, முன்னாள் மாநகராட்சி கவுன்சிலர் தலைமையில், பொதுமக்களுக்கு மாபெரும் அன்னதானமும் விநியோகம் செய்யப்பட்டது.

ஊர் பஞ்சாயத்து தலைவர் களின் முன்னிலையில், எஸ் விஜயகுமார், எம் .மணிமாறன் வரவேற்புரையில் நடந்தது. நிகழ்ச்சி ஏற்பாடு எஸ். துலுக்கானம், யூ. கோவேந்தன், காளியம்மன் பந்தல் சப்ளையர்ஸ் அன்னதானத்தை தொடங்கி வைத்தனர். வேலூர் அ இ தி மு க மாவட்ட செயலாளர் எஸ். ஆர். கே. அப்பு மற்றும். ஏ. ஏ. தாஸ் மாநில அம்மா பேரவை செயலாளர், பகுதி கழக செயலாளர் வி. பி .எம்.குமார், டி. டி .ஆர். ரகு, பகுதி கழக செயலாளர், பகுதி இலக்கிய அணி செயலாளர் எம். ஏ. ராஜா, மாவட்ட மாணவர் அணி செயலாளர் கே .ஆர் .ராஜேஷ் ,பகுதி கழக அவைத்தலைவர் பி. சிவாஜி, பொன். ஜெயராமன், இலக்கிய அணி செயலாளர் எம் சண்முகம், இ. கனகராஜ் மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டு. பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

## இலங்கைத் தமிழர்கள் முதல்வர் ஸ்டாலினை கோட்டையில் சந்திப்பு




தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் நேற்று முதல்வர் ஸ்டாலினை கோட்டையில் சந்தித்து,பல்வேறு சிறப்பு நலத்திட்டங்களுக்காக நன்றி தெரிவித்தனர். உடன் அமைச்சர் நாசர்.




சென்னை - மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் கோபுரங்கள் மற்றும் விமானங்களை இரவு நேரத்தில் பல வண்ண விளக்குகளால் ஒளிரூட்டும் பணிகளை அமைச்சர் சேகர்பாபு துவக்கி வைத்தார்.

## நடிகை தேவயானியை வரவேற்ற மேயர் பிரியா



சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில், நடந்த முதல்வரின் பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற நடிகை தேவயானியை மேயர் பிரியா வரவேற்றார்.

## நம் வாசவி அம்மன் மாசி மாதம் அமாவாசை, கந்த சஷ்டி பாராயணம் சிறப்பு வழிபாடு







**பொள்ளாச்சி, பிப்.19:** பொள்ளாச்சி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் அமாவாசையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. கந்த சஷ்டி பாராயணமும் நடைபெற்றது.

ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கவுண்டம் பாளையத்தில் ஜல்லிக்கட்டு போட்டி




நாமகிரிப்பேட்டை ஒன்றியம், தாண்டா கவுண்டம் பாளையத்தில் ஜல்லிக்கட்டு போட்டியினை ராஜேஷ்குமார் எம்பி துவக்கி வைத்தார்.

## மாதவரத்தில் தவெக கூட்டம்



மாதவரத்தில் பொன்னியம்மன்மேட்டில் நடந்த தவெக கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் பேசினார்.

## வாடிப்பட்டியில் நலம் நாடுவோர் கருத்தரங்கு



**வாடிப்பட்டி, பிப்.19:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் வாசன் கண் மருத்துவமனை சார்பாக நலம் நாடுவோர் கருத்தரங்கு மற்றும் இலவச கண் பரிசோதனை முகாம் கிருஷ்ணா மகாலில் நடந்தது.

இந்த கருத்தரங்கிற்கு வாசன் கண் மருத்துவமனை தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் கமல் பாபு தலைமை தாங்கினார். கிராம முக்கிய பிரமுகர்கள் சி.காந்தி, கிருஷ்ணன், வழக்கறிஞர் சங்கத் தலைவர் முத்துமணி, அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் செல்வகுமார் வரவேற்றார்.

இந்த கருத்தரங்கில் டாக்டர்கள் பிரேம் குமார், கோபால் அர்ச்சனா, சௌந்தர்யா ராகினி ஆகியோர் கண் நோய்கள், கண் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் அறுவை சிகிச்சை பற்றி விளக்கி பேசினர்.

இதில் வாடிப்பட்டி வட்ட சட்ட பணி குழு வழக்கறிஞர்கள், அரிமா சங்க நிர்வாகிகள்,மகளிர் குழு நிர்வாகிகள்,விவசாய சங்க நிர்வாகிகள், ஓய்வு பெற்ற அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் ஏற்பாடுகளை வாசன் கண் மருத்துவமனை நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர். முன்னதாக இலவச கண் பரிசோதனை முகாம் நடந்தது.

## இராஜா நந்திவர்மன் கல்லூரி என்எஸ்எஸ் திட்ட நிறைவு விழா..!




**வந்தவாசி, பிப் 19:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட நிறைவு விழா ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக, கல்லூரி தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

இன்றைய சூழலில் மாணவர்கள் சமூக நோக்குடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். நிகழ்வில் கல்லூரி முதல்வர் இரா.ஏழுமலை, இயக்குநர்கள் டிகேஜி ஆனந்த், அப்பாண்டைராஜ், பா. சுரேஷ், அருள் முருகன்,ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் சீனிவாசன், பொருளாளர் பழனிச்சாமி, வட்டார மருத்துவ அலுவலர் ஹித்தேன் டி ஷா, நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயப்பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் பங்கேற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. முன்னதாக ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது.

**பா.சீனிவாசன்,வந்தவாசி.**

## ஈரோட்டில் 157 பேருக்கு நலத்திட்ட உதவி: அமைச்சர் முத்துசாமி வழங்கினார்

ஈரோடு, பிப்.19:

ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 157 பயனாளிகளுக்கு ரூ.67.98 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 62 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,01,800 மதிப்பில் மொத்தம் ரூ.63,11,600 செலவில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, சமூக நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் மூலம் 20252026 நிதியாண்டில் விண்ணப்பித்து தேர்வு செய்யப்பட்ட 97 பேருக்கு தலா ரூ.5,024 மதிப்பில் மொத்தம் ரூ.4,87,328 செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில், தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 1.31 கோடி பெண்களுக்கு ரூ.5,000 வழங்கப்பட்டுள்ளதாகவும், ஈரோடு மாவட்டத்தில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணம் ரூ.3,000 மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகை ரூ.2,000 என மொத்தம் ரூ.5,000, 4,53,206 பெண்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

## நாமக்கல்லில் நாளை 20ம் தேதி தனியார் வேலைவாய்ப்பு

நாமக்கல், பிப். 19:

நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் மாதந்தோறும் நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இம்மாதம் பிப்ரவரி 20ஆம் தேதி நடைபெறுகிறது.

மூன்றாவது வெள்ளிக்கிழமை நடத்தப்படும் இந்த முகாம், காலை 10.30 மணிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் நடைபெறும் என கலெக்டர் துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த முகாமில் பல்வேறு தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு மேலாளர், கணினி இயக்குபவர், மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ், ஏரியா மேனேஜர், டீம் லீடர், சூப்பர்வைசர், கணக்காளர், காசாளர், தட்டச்சர், மெக்கானிக், சேல்ஸ் அசிஸ்டென்ட் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தேர்வு நடத்த உள்ளன. 10ஆம் வகுப்பு தேர்ச்சி, தேர்ச்சி பெறாதோர், 12ஆம் வகுப்பு, பட்டயப்படிப்பு (டிப்ளமோ), பட்டப்படிப்பு, ஐ.டி.ஐ. பயிற்சி மற்றும் கணினி தொடர்பான பயிற்சி (ஜாவா, டாலி) முடித்த ஆண், பெண் உள்ளிட்ட அனைத்து கல்வித்தகுதி கொண்டவர்களும் பங்கேற்கலாம். மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் வழங்கும் இலவச திறன் பயிற்சிகளில் சேர பதிவு மற்றும் ஆலோசனையும் வழங்கப்படும். இம்முகாமில் பங்கேற்க வேலையளிப்போரும், வேலைநாடுநர்களும் எந்தவித கட்டணமும் செலுத்த தேவையில்லை. வேலையளிப்போரும், வேலைநாடுநர்களும் WWW. TNPRIVATEJOBS.TN.GOV.IN என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்திருக்க வேண்டும். இம்முகாம் மூலம் பணியில் அமர்த்தப்பட்டவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு 04286-222260 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 20ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கோவையில் உலக தாய்மொழி நாள் விழா

வடவள்ளி, பிப். 19:

கோவை ஆர்.எஸ்.புரத்தில் உலகத் தாய்மொழி நாள் விழா சிறப்பாக நடைபெற்றது. சிக்ஷா சன்ஸ்கிருதி உத்தான் நியாஸ், பாரதிய பாஷா அபியான் மற்றும் பாரதிய மொழிகள் பேரவை ஆகிய அமைப்புகள் இணைந்து சேவாஸ்ரமம் பள்ளியில் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தன. விழாவில் பாரதிய பாஷா அபியான் ஒருங்கிணைப்பாளர் மற்றும் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ராகேவேந்திர சுக்லா பங்கேற்றார். தமிழக ஒருங்கிணைப்பாளர்களாக வழக்கறிஞர்கள் பிரவீன், பிரியாங்கா மற்றும் பாரதிய மொழிகள் பேரவை சார்பில் தமிழக ஒருங்கிணைப்பாளர்களான பேராசிரியர்கள் மு.சௌந்தரராஜ், மு.சந்தோஷ்குமார், மோகன்குமார் ஆகியோர் விழாவை ஏற்பாடு செய்து நடத்தினர். நிகழ்வில் மாநிலங்களின் தாய்மொழிகள் பள்ளிக் கல்வி, உயர்கல்வி, மருத்துவம், சட்டம் உள்ளிட்ட அனைத்து கல்வித் துறைகளிலும் கற்றல் மொழியாக அமல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

## சென்னையில் 16 உழவர் அங்காடிகள்: ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை, பிப்.19:

வேளாண்மைஉழவர் நலத்துறை சார்பில் 16 உழவர் அங்காடிகளை தொடங்கி வைத்து, 23 வேளாண் உழவர் நலத்துறை கட்டடங்களை திறந்து வைத்து, 54 தொழில்முனைவோர்களுக்கு மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைக்க ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கி, இயந்திர வாடகை சேவையினை வலுப்படுத்த 672 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் சேவைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

உழவர்கள் வளம் பெறுவதுடன் நுகர்வோர்களின் நலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர் சிந்தனையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 2 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் 11 உழவர் அங்காடிகள் மற்றும் 5 நடமாடும் உழவர் அங்காடிகள் மூலம் விவசாயிகளின் காய்கறிகள், பழங்கள், பாரம்பரிய அரிசி, சிறுதானியங்கள், பால் பொருட்கள், பனைப் பொருட்கள், பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை செய்ய ஏதுவாக மொத்தம் 16 உழவர் அங்காடிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி, தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர், நாமக்கல் மாவட்டம் மோகனூர், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி மற்றும் வேப்பனப்பள்ளி ஆகிய இடங்களில் 17 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

தேனி மாவட்டம் கோட்டூர் மற்றும் சங்கராபுரம், மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர், நாகப்பட்டினம் மாவட்டம் கணபதிபுரம், திருப்பூர் மாவட்டம் குளத்துப்பாளையம் மற்றும் பள்ளப்பாளையம் ஆகிய இடங்களில் 3 கோடியே30 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம் திருப்பதிசாரம் ஆகிய இடங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் தலா 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 விதை சேமிப்புக் கிடங்குகள்;

நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் 5 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு வளாகம்;

கடலூர் மாவட்டம் வேப்பூரில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கூடுதல் கட்டமைப்பு, சேலம் மாவட்டம் காடையாம்பட்டி, நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் 18 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூரில் 92 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 100 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு, திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தோட்டக்கலை பட்டயப்படிப்பு கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம், அரியலூரில் 1 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை விரிவாக்க மையம்;

என மொத்தம் 53 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 23 வேளாண் உழவர் நலத்துறை கட்டடங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

'100 மதிப்புக்கூட்டும் மையங்கள்' அமைக்கும் திட்டம் 202526 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் 25 முதல் 35 சதவீதம் வரை முதலீட்டு மானியமும், அதிகபட்சமாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது. இவை தவிர, 5 ஆண்டுகளுக்கு 5 சதவீத வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. கூடுதலாக வேளாண் கட்டமைப்பு நிதி திட்டத்தில் 3 சதவீத வட்டி மானியமும் பெறலாம்.

## நாகாவதி அணையில் இருந்து 100 நாட்களுக்கு பாசன நீர் திறப்பு

தருமபுரி, பிப்.19:



தருமபுரி மாவட்டம் பென்னாகரம்வட்டம்எர்ரப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள நாகாவதி அணையிலிருந்து 202526ஆம் ஆண்டுக்கான இரண்டாம் போக புன்செய் பயிர் சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

கலெக்டர் ரெ. சதீஸ், நாடாளுமன்ற உறுப்பினர் மணி முன்னிலையில் நேற்று (பிப்ரவரி 16) அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்தார்.

அரசு ஆணைப்படி, பிப்ரவரி 16 முதல் மே 26 வரை மொத்தம் 100 நாட்களுக்கு முறைப்படி பாசன நீர் விடப்படும். முதல் 5 நாட்களுக்கு ஒரு மண்டலத்திற்கும், அடுத்த 5 நாட்களுக்கு மற்றொரு மண்டலத்திற்கும் தண்ணீர் விடப்பட்டு, பின்னர் 5 நாட்கள் நிறுத்தி, இவ்வாறு மொத்தம் 7 நனைப்புகளுக்கு 117.91 மில்லியன் கனஅடி தண்ணீர் தலைமை மதகின் வழியாக வெளியேற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகாவதி நீர்த்தேக்கத்தில் தற்போது உள்ள நீர்வரத்து நிலையை கருத்தில் கொண்டு, பென்னாகரம் வட்டத்திலுள்ள ஆயக்கட்டு பகுதிகளுக்கு பயனளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் அரகாசனஅள்ளி, சின்னம்பள்ளி மற்றும் பெரும்பாலை கிராமங்களில் உள்ள 1,993 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும்.

விவசாயிகள் நீர்வள ஆதாரத்துறை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

## உற்பத்தி, வேலைவாய்ப்பில் இந்தியாவிலே தமிழகம் முதலிடம்: பொருளாதார ஆய்வறிக்கையில் தகவல்

சென்னை, பிப்.19:




தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 202526, கடந்த ஐந்து ஆண்டிற்கான மாநிலத்தின் பொருளாதாரத்தின் வளர்ச்சி பாதையை எடுத்துரைக்கிறது. இவ்வறிக்கை 10 அத்தியாயங்களில் பொருளாதாரத்தின் பல்வேறு முக்கிய அம்சங்கள் மற்றும் அவை எவ்வாறு செயல்பட்டது என்பதை விரிவாக விளக்குகிறது.

இவ்வறிக்கையானது, நம் மாநிலத்தின் பொருளாதார செயல்பாடுகளை விளக்குவதுடன், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இணையான தனிநபர் வருமானம் ஆகிய இரு இலக்குகளையும் அடைய கவனிக்க வேண்டிய பகுதிகளையும் சுட்டிக்காட்டுகிறது.

இந்த பொருளாதார ஆய்வறிக்கை, கொள்கை வகுப்பாளர்கள், வணிகம், தொழில்வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு முக்கியமான தகவல்களை வழங்குகிறது. பொருளாதார போக்குகளை ஆவணப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் எதிர்கால மேம்பாட்டு உத்திகளை வடிவமைப்பதற்கும், சான்றுகள் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை வலுப்படுத்துவதற்கும் முக்கியமான கருவியாக செயல்படும்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் அரசு செயலாளர் மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் சஜ்ஜன் சிங் ரா சவான் மற்றும் நிதித்துறை துணை செயலாளர் சி.ஏ. ரிஷப், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 2024-25-ம் ஆண்டின் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமிழ்நாடு 9.4 சதவீதம் பங்களிப்பை அளித்துள்ளது. உற்பத்தி துறையில் 14.74 சதவீத வளர்ச்சியை பெற்று இந்தியாவில், தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மேலும், உற்பத்தி துறை வேலை வாய்ப்புகளில் நாட்டின் மொத்த தொழிற்சாலை பணியாளர்களில் தமிழ்நாடு 15 சதவீதத்துடன் முன்னணி பங்களிப்பாளராக விளங்குகிறது. மின்னணு சாதனங்கள், ஜவுளி, தோல் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது. கடந்த நிதியாண் டில் வணிக பொருட்கள் ஏற்றுமதி 52.07 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.தமிழ்நாட்டின் சராசரி வருமானம் 2024-25-ல் ரூ.3.62 லட்சத்தை எட்டி, தேசிய சராசரியான 2.05 லட்சத்தை காட்டிலும் 1.77 மடங்கு அதிகமாக இருக்கிறது.தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருமாவட்டமும் தற்போது ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில் வழித்தட திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.2030-ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைவதற்கு தகுந்த நிலையில் தமிழகம் இருக்கிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## சிறுநீரை அடக்கும் பழக்கம் இருப்பவரா? பல பிரச்னைகளுக்கு இதுவே காரணம்... உஷார்!

சிறுநீர் பாதை தொற்று(UTI) என்பது சிறுநீரகம் சிறுநீர்ப்பை அல்லது சிறுநீர் குழாய் ஆகியவற்றில் பாக்டீரியாக்களால் ஏற்படும் ஒரு பொதுவான பாதிப்பாகும்.

அறிகுறிகள்:

சிறுநீர் கழிக்கும்பொழுது வலி அல்லது எரியும் உணர்வு ஏற்படுவது.

அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படும். ஆனால் சிறிதளவே வெளியேறும்.

சிறுநீரில் துர்நாற்றம் ஏற்படுவது, சிறுநீர் கலங்கலாக ரத்தம் கலந்து வருவது.

முதுகு மற்றும் இடுப்பு வலி அல்லது அடிவயிற்றில் அழுத்தம், தசைப் பிடிப்பு.

காய்ச்சல், குளிர், முதுகு வலி போன்றவை சிறுநீரகத் தொற்றின் அறிகுறியாக இருக்கலாம்.

காரணங்கள்:

பாக்டீரியா, பூஞ்சை மற்றும் வைரஸ்கள் போன்ற நுண்ணுயிரிகளால் சிறுநீர்ப் பாதை பாதிக்கப்படும் பொழுது சிறுநீர்ப் பாதை தொற்று ஏற்படுகிறது. குறிப்பாக ஈ.கொலி(E.COLI) பாக்டீரியா சிறுநீர் பாதையில் நுழைவதால் தொற்று ஏற்படுகிறது.

சிறுநீரை நீண்ட நேரம் அடக்குவது பாக்டீரியா பெருக்கத்திற்கு வழி வகுக்கும்.

மலம் கழித்த பின்பு முறையற்ற வகையில் பின்னிருந்து முன்புறம் சுத்தப்படுத்துவது பாக்டீரியா பரவலுக்கு முக்கிய காரணமாகிறது.

குறைவாக தண்ணீர் குடிப்பதால் சிறுநீர் வெளியேற்றம் குறைந்து, பாக்டீரியாக்கள் சிறுநீர்ப்பையில் தங்கி வளர நேரிடுகிறது.

மாதவிடாய் நிறுத்தத்திற்குப் பின்பு ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் மற்றும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடற்கூறு மாற்றங்கள் சிறுநீர் தொற்றுக்கு வழிவகுக்கும்.

சர்க்கரை நோய் அல்லது சிறுநீரகக் கற்கள் இருந்தாலும் தொற்று ஏற்படலாம்.

தீர்வுகள் மற்றும் தடுப்பு முறைகள்:

தினமும் போதுமான அளவு (3 லிட்டர்) தண்ணீர் அருந்துவது பாக்டீரியாவை வெளியேற்ற உதவும்.

சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் வெளியேற்றி விடுவது நல்லது.

காஃபின், ஆல்கஹால் மற்றும் காரமான உணவுகளைக் குறைப்பது சிறுநீர்ப்பை எரிச்சலை தவிர்க்க உதவும்.

கழிவறை பயன்பாட்டிற்கு பின் சுகாதாரத்தைப் பேணுவது அவசியம்.

கிருமிகள் சிறுநீர் பாதையில் பரவாமல் இருக்க, முன் பகுதியிலிருந்து பின் பகுதியை நோக்கி சுத்தம் செய்ய வேண்டும்.

தடுப்பு முறைகள்:

வைட்டமின் சி சிறுநீர் பாதை நோய்த் தொற்றுகளை தடுக்க உதவும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பண்புகளைக் கொண்டிருக்கிறது. எனவே உணவில் வைட்டமின் சி நிறைந்த உணவுகளை சேர்ப்பது நல்லது. ஆரஞ்சு, எலுமிச்சை, திராட்சைப்பழம் போன்ற சிட்ரஸ் பழங்களும், குடைமிளகாய், கிவி போன்றவையும் வைட்டமின் சி நிறைந்தவை.

நல்ல பாக்டீரியா என்றழைக்கப்படும் புரோபயாடிக்குகள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதிலும், சிறுநீர் பாதையில் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களின் வளர்ச்சியை தடுப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே உணவில் புரோபயாடிக் நிறைந்த தயிர், மோர், பழைய சோறு, ஊறுகாய், கெஃபிர்(KEFIR), சீஸ் போன்ற உணவுகளை சேர்ப்பது நல்லது.

# குமாரபாளையத்தில் மூத்த தம்பதியினருக்கு அரசு சார்பில் மரியாதை

**குமாரபாளையம், பிப்.19:**

குமாரபாளையத்தில் மூத்த தம்பதியினருக்கு அரசு சார்பில் மரியாதை வழங்கப்பட்டது.

70 வயது நிறைந்த மூத்த தம்பதியினருக்கு அரசு சார்பில் மரியாதை வழங்கும் நிகழ்வை, சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் துவக்கி வைத்தார். அதைத் தொடர்ந்து, மாநிலம் முழுதும் இந்த நிகழ்வு, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடத்தப்பட்டது.

இதன் ஒருகட்டமாக, குமாரபாளையம் லட்சுமி நாராயண சுவாமி கோவிலில், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சௌந்தரம் தலைமையில் நடந்தது. இதில் 70 வயது நிறைந்த, ஏழை இந்து சமூகத்தை சேர்ந்த 21 மூத்த தம்பதியினர் பங்கேற்றனர். இவர்களுக்கு சேலை, வேட்டி, துண்டு, சில்வர் பாத்திரம், தேங்காய், பழங்கள் மற்றும் பல வழங்கப்பட்டன. இதில், செயல் அலுவலர் குணசேகரன், கோயில் அர்ச்சகர்கள், மூத்த குடிமக்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

# 40வது பட்டமளிப்பு விழா பாரதியார் பல்கலைக்கழகத்தில் 92,287 மாணவர்களுக்கு பட்டம்

**கோவை, பிப். 19:**

கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் 40வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள டாக்டர் உஷா கீர்த்திலால் மேத்தா பேரவை அரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு பல்கலைக்கழகத்தின் வேந்தரும் தமிழ்நாடு கவர்னருமான ஆர்.என்.ரவி தலைமை தாங்கி பட்டமளிப்பு விழாவைத் தொடங்கி வைத்தார். விழாவில், பல்கலைக்கழக துணை வேந்தர் குழு ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு உயர்கல்வித்துறை செயலாளருமான பி.சங்கர், சிறப்பு விருந்தினராக மும்பையில் அமைந்துள்ள ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைவேந்தர் காமாட்சி முதலி, பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் ஆர்.ராஜவேல், தேர்வாணையாளர் கே.விஜயராணி, துணைவேந்தர் குழு உறுப்பினர் ஆர்.துர்கா சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் பல்கலைக்கழக வளர்ச்சி, புதிய கல்வித் திட்டங்கள், தொழில்துறை இணைப்புகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டன. கடந்த ஆண்டில் பல புதிய கல்வித் திட்டங்கள் தொடங்கப்பட்டதுடன், ஆராய்ச்சி மற்றும் புதுமை முயற்சிகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

நிதி ஆயோக் மற்றும் ஆயுஸ் அறிக்கைகளின் அடிப்படையில் உயர்கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், தேசிய சராசரியை விட தமிழகத்தின் கல்வி வளர்ச்சி உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

இந்த ஆண்டில் மொத்தம் 92,287 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில் 1,271 பேர் நேரில் பங்கேற்று பட்டம் பெற்றனர்.

# திருச்செந்தூர் கோவில் மாசித் திருவிழா: 21-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது

**சென்னை, பிப்.19:**



முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில், இந்த ஆண்டிற்கான மாசித் திருவிழா வரும் பிப்ரவரி 21-ஆம் தேதி சனிக்கிழமை அன்று கொடியேற்றத்துடன் மிக விமர்சையாகத் தொடங்குகிறது.

12 நாட்கள் நடைபெறும் இந்த விழாவிற்காக, வரும் 21-ஆம் தேதி அதிகாலை 1 மணிக்குக் கோவில் நடை திறக்கப்பட்டு, 1:30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 2 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து, காலை 5:00 மணி முதல் 5:30 மணிக்குள் கோவில் செப்பு கொடிமரத்தில் மாசித் திருவிழா கொடியேற்றம் நடைபெறும். பின்னர் கொடி மரத்திற்குப் பல்வேறு திரவியங்களால் அபிஷேகம் மற்றும் மகா தீபாராதனை நடத்தப்பட்டு, மற்ற கால பூஜைகள் தொடரும்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான 5-ஆம் திருநாள், வரும் 25-ஆம் தேதி நடைபெறுகிறது. அன்று இரவு 7:30 மணிக்கு ஆனந்தவல்லி அம்பாள் சமேத சிவகொழுந்தீஸ்வரர் கோவிலில் வைத்து சுவாமிக்கும் அம்பாளுக்கும் குடவருவாயில் தீபாராதனை நடைபெறும். இதனைத் தொடர்ந்து 7-ஆம் திருநாளான 27-ஆம் தேதி, அதிகாலை 1 மணிக்கு நடை திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறும். காலை 9 மணிக்கு சுவாமி சண்முகர் வெற்றிவேர் சப்பரத்தில் எழுந்தருள்வார். அன்று மாலை 4:30 மணிக்கு சுவாமி சண்முகர் தங்கச் சப்பரத்தில் 'சிவப்பு சாத்தி' கோலத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பார்.

விழாவின் 8-ஆம் திருநாள் அதிகாலை, சுவாமி சண்முகர் வெள்ளிச் சப்பரத்தில் 'வெள்ளை சாத்தி' கோலத்தில் வீதி உலா வருவார். அதனைத் தொடர்ந்து, அன்று பகல் 10:30 மணிக்கு சுவாமி சண்முகர் பச்சை நிற கடைசல் சப்பரத்தில் 'பச்சை சாத்தி' கோலத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான 10-ஆம் திருநாள் தேரோட்டம், மார்ச் 2-ஆம் தேதி திங்கட்கிழமை நடைபெறுகிறது. அன்று காலை 7 மணிக்கு விநாயகர், சுவாமி மற்றும் அம்பாள் தனித்தனி தேர்களில் எழுந்தருளி வெளிவீதி நான்கு ரத வீதிகளிலும் பவனி வந்து பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்கள்.

11-ஆம் திருநாளான மார்ச் 3-ஆம் தேதி இரவு 10:30 மணிக்கு மேல் சுவாமியும் அம்பாளும் 11 முறை தெப்பத்தில் சுற்றி வரும் தெப்ப உற்சவம் நடைபெறும். இந்த விழாவிற்கான விரிவான ஏற்பாடுகளைக் கோவில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# பரமத்தி வேலூர்: அம்மன் கோவில்களில் அமாவாசை சிறப்பு வழிபாடு

**நாமக்கல், பிப். 19:**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா, கோப்பணம்பாளையம் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் மாசி மாத அமாவாசையை முன்னிட்டு முன்னிட்டு அங்காள பரமேஸ்வரி அம்மன், அரசாகி அம்மன், மாசாணி அம்மனுக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 18 வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

இதில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. அதேபோல் பரமத்தி வேலூர் பேட்டை மகா மாரியம்மன் , பகவதி அம்மன், காவேரி சாலையில் உள்ள மாரியம்மன், பழைய தேசிய நெடுஞ்சாலையில் உள்ள செல்லாண்டியம்மன், நன்செய் இடையாறு மாரியம்மன், காவேரி ஆற்றங்கரை அருகே உள்ள மூங்கில் வனத்து சங்கிலி கருப்பண்ணசாமி கோவில், பரமத்தி அங்காளம்மன், வேலூர் எல்லையம்மன், பாண்டமங்கலம் மாரியம்மன், பகவதி அம்மன், கொந்தளம் மாரியம்மன், சேளூர் மாரியம்மன், குன்னத்தூர் மாரியம்மன், அய்யம்பாளையம் பகவதி அம்மன், ஆனங்கூர் மாரியம்மன், பகவதி அம்மன், செல்லாண்டியம்மன், வடகரையாத்தூர் மாரியம்மன், பகவதி அம்மன் மற்றும் பரமத்தி வேலூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அம்மன் கோவில்கள் மற்றும் குடிப்பாட்டு கோவில்களில் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அலங்காரமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. இதில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் மற்றும் குடிப்பாட்டு மக்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# திருப்பதி கபிலேஸ்வரர் கோவிலில் ராவணாசுர வாகன சேவையுடன் பிரம்மோற்சவ விழா நிறைவு

**திருப்பதி, பிப்.19:**



திருப்பதி கபிலேஸ்வரர் கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெற்றது. விழாவின் நிறைவு நாளான நேற்று காலையில் நடராஜப் பெருமான் வீதியுலா நடைபெற்றது. சூரிய பிரபை வாகனத்தில் எழுந்தருளிய நடராஜர், அண்ணா ராவ் சதுக்கம் வரை ஊர்வலமாக சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் கோவிலுக்கு திரும்பினர்.

காலை 9 மணியளவில் சைவ ஆகம முறைப்படி திரிசூல ஸ்னானம் (திரிசூல தீர்த்தவாரி) நடைபெற்றது. இரவு 8 மணி முதல் 10 மணி வரை ராவணாசுர வாகன சேவை நடைபெற்றது.

பத்து தலை ராவணாசுர வாகனத்தில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி, கோவில் மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

ராவணாசுர வாகன சேவை: முன்னதாக பிரம்மோற்சவத்தின் பிரமாண்டமான நிறைவைக் குறிக்கும் வகையில் மாலை 6 மணி முதல் 7.30 மணிக்குள் கொடியிறக்கும் நிகழ்வு (த்வஜாவரோஹணம்) நடைபெற்றது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கோவில் மேற்பார்வையாளர் சந்திரசேகர் மற்றும் அர்ச்சகர்கள், அதிகாரிகள் மற்றும் திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.




# நீலகிரி மாவட்டத்தில் முதன்முறையாக மகளிருக்கான பாதுகாப்பு வசதியுடன் புகையில்லா அரசு பேருந்துகள் இயக்கம்

**நீலகிரி, பிப்.19:**

நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 16 புதிய பிஎஸ்6 (புகையில்லா) அரசு பேருந்துகள் கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டன.

உதகை மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் ரூ.40.61 லட்சம் மதிப்பில் வாங்கப்பட்ட பேருந்துகளை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அரசு தலைமை கொறடா, "நீலகிரி மாவட்டத்தில் தற்போது ஊட்டி மண்டலத்தில் 337 வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நீலகிரியில் 16 புதிய பிஎஸ்6 பேருந்துகள் சேவைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 22 பிஎஸ்6 பேருந்துகள் விரைவில் ஊட்டி மண்டலத்திற்கு வரவுள்ளன. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மூலம் 'விடியல் பயணம்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 110 பேருந்துகளில் 2022ஆம் ஆண்டு முதல் 2026 ஜனவரி 31 வரை 4.05 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.89.26 கோடி. இந்தச் செலவினத்தை முழுமையாக அரசு ஏற்றுள்ளது," என்றார். மேலும், "பிஎஸ்6 பேருந்துகள் அதிகரிப்பதால் உதகையில் புகையில்லா சூழல் மேம்படும். பேருந்துகளில் வாகனத்தின் இருப்பிடத்தை கண்டறியும் கருவி (விஎல்டிடி) மற்றும் அவசர கால உதவி பொத்தான் கட்டாயமாக பொருத்தப்பட்டுள்ளது. பெண்கள் உள்ளிட்ட பயணிகள் ஏதாவது அசௌகரியம் சந்தித்தால், பேருந்தில் உள்ள சிவப்பு நிற அவசர பொத்தானை அழுத்தினால் அருகிலுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் சென்றடைந்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்," என்றும் தெரிவித்தார்.

# ஈரோட்டில் பிப்ரவரி 20ஆம் தேதி வேளாண் குறைதீர்க்கும் கூட்டம்

**ஈரோடு, பிப். 19:**

ஈரோடு மாவட்டத்தில் பிப்ரவரி மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் கூட்டம் பிப்ரவரி 20ஆம் தேதி நடைபெறுகிறது.

கலெக்டர் அலுவலகத்தின் இரண்டாம் தளக் கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்கும் என்று கலெக்டர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 10 மணி முதல் 11.30 மணி வரை விவசாயிகளிடமிருந்து மனுக்கள் பெறப்படும். தொடர்ந்து காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்களது பகுதிகளில் நிலவும் விவசாய தொடர்பான பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 மணி முதல் 1.30 மணி வரை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விளக்கங்கள் அளிக்க உள்ளனர். இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை பதிவு செய்து பயன்பெறுமாறு கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கருந்துளைக்குள் விழுந்தால் மனிதனுக்கு என்ன ஆகும்?

பிரபஞ்சத்தின் மிகவும் விசித்திரமான மற்றும் பயமுறுத்தும் ஒரு விஷயம் கருந்துளை (BLACK HOLE). ஒளி கூட தப்பிக்க முடியாத அளவுக்கு ஈர்ப்பு விசை கொண்ட இந்த இடத்திற்குள் ஒரு மனிதன் சென்றால் என்ன நடக்கும்?

நீங்கள் ஒரு கருந்துளையை நோக்கி பயணிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் எல்லையைத் தொடும் வரை எல்லாம் சாதாரணமாகவே இருக்கும். இந்த எல்லைக்கு நிகழ்வு எல்லை என்று பெயர். இதைத் தாண்டிவிட்டால் அப்புறம் திரும்பி வர வழியே இல்லை. ஒளியின் வேகத்தில் சென்றால் கூட உங்களால் வெளியேற முடியாது.

கருந்துளையின் (BLACK HOLE) ஈர்ப்பு விசை மிக மிக அதிகம். நீங்கள் காலால் முதலில் கருந்துளைக்குள் நுழைந்தால், உங்கள் தலைப்பகுதியை விட கால் பகுதியில் ஈர்ப்பு விசை பல கோடி மடங்கு அதிகமாக இருக்கும். இதனால் உங்கள் உடல் ஒரு நூடுல்ஸ் அல்லது ஸ்பாகெட்டி போல நீளமாக இழுக்கப்படும். இதைத்தான் விஞ்ஞானிகள் 'ஸ்பாகெட்டிஃபிகேஷன்' என்று அழைக்கிறார்கள். ஒரு கட்டத்தில் உங்கள் அணுக்கள் தனித்தனியாகப் பிரிந்து சிதறிவிடும்.

ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவப்படி, அதிக ஈர்ப்பு விசை உள்ள இடத்தில் காலம் மெதுவாக நகரும். நீங்கள் கருந்துளைக்குள் விழுவதை வெளியே



இருந்து ஒருவர் பார்த்தால், நீங்கள் மெல்ல மெல்ல நகர்ந்து, ஒரு கட்டத்தில் அப்படியே சிலையாக நின்றுவிட்டது போல அவருக்குத் தோன்றுமாம்.

ஆனால் உங்களுக்கு காலம் சாதாரணமாகவே நகரும். நீங்கள் உள்ளே விழும்போது, பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த எதிர்காலமும் உங்கள் கண் முன்னே மிக வேகமாக ஓடி முடிந்துவிடும். அதாவது, நீங்கள் ஒரு சில நிமிடங்களில் பிரபஞ்சத்தின் கோடிக்கணக்கான ஆண்டுகளைப் பார்த்துவிட முடியும்.

கருந்துளையின் மையப்பகுதியை 'சிங்குலாரிட்டி' என்பார்கள். இங்கே இயற்பியல் விதிகள் அனைத்தும் செயலிழந்துவிடும். இங்கே அடர்த்தி முடிவிலியாக இருக்கும். அங்கே சென்ற பிறகு உங்களுக்கு என்ன ஆகும் என்பது இன்றுவரை அறிவியலால் விடை காண முடியாத ஒரு மர்மம்.

சில விஞ்ஞானிகள் இது மற்றொரு பிரபஞ்சத்திற்கான நுழைவாயிலாக இருக்கலாம் என்றும், நீங்கள் வேறொரு பரிமாணத்திற்குச் செல்லக்கூடும் என்றும் கருதுகிறார்கள்.

கருந்துளைக்குள் (BLACK HOLE) விழுவது என்பது தற்கொலைக்குச் சமமானது என்றாலும், அது பிரபஞ்சத்தின் ரகசியங்களைத் தெரிந்து கொள்ளும் ஒரு மாபெரும் வழியாகும். தற்போதைய தொழில்நுட்பத்தில் நாம் அங்கு செல்வது சாத்தியமில்லை என்றாலும், கருந்துளைகள் பற்றிய ஆய்வுகள், பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் முடிவு பற்றிய பல உண்மைகளை நமக்கு உணர்த்திக்கொண்டே இருக்கின்றன.

"கருந்துளைகள், அவைகள் வரைவது போல அவ்வளவு கருமையானவை அல்ல. அவை ஒரு காலத்தில் கருதப்பட்டது போல நித்திய சிறைகளும் அல்ல. சில விஷயங்கள் கருந்துளையில் இருந்து வெளி உலகிற்கு வர முடியும், அநேகமாக மற்றொரு பிரபஞ்சத்திற்கும் கூட." உண்மையில், இந்த மர்மமான வானியல் அமைப்புகள் நம் பிரபஞ்சத்தை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கிட்டத்தட்ட ஒவ்வொரு பெரிய விண்மீன் மண்டலத்தின் மையத்திலும் (நமது பால்வெளியின் மையத்தில் உள்ள தனுசு A* உட்பட) ஒரு மாபெரும் கருந்துளை இருப்பதாக வானியலாளர்கள் நம்புகிறார்கள். இந்த ஈர்ப்பு மையங்கள் விண்மீன் திரள்களின் அமைப்பு மற்றும் நட்சத்திர உருவாக்கம் போன்றவற்றை ஒழுங்குபடுத்துகின்றன.

கருந்துளைகள் இருண்டவை, ஆனால் அவை நம் பிரபஞ்சத்தின் ஆழமான விதிகள் மற்றும் வடிவங்களை வெளிப்படுத்துகின்றன. அந்த இருண்ட மூலைகளில் கூட, இன்னும் கண்டறியப்படாத கதைகள் மற்றும் சட்டங்கள் காத்திருக்கின்றன. இந்த ரகசியங்களே நம்மை அவை நோக்கி மீண்டும் மீண்டும் இழுத்துக்கொண்டே இருக்கின்றன!

# ரம்யாவின் காதல் !



' ரம்மு...அடியே ரம்மு !" அடுக்களையில் இருந்த ரம்யா பாட்டி கணவரின் கிண்டலான அழைப்பைக் கேட்டு கடுப்படைந்து வெளிப்பட்டார்.

" தெரியாமத்தான் கேட்கறேன் ரம்யா ன்னு அழகா பேர் வச்சிருக்கா. அதெ ன்ன ரம்மு, விஸ்கின்னு கூப்ட றது!"

" அடேடே! ட்ரிங்க்ஸ் பேரெல்லாம் கரெக்டா சொல்றயே. சின்ன வயசிலகுடிக்கற பழக்கம் உண்டா ?" கலாய்த்தார் தாத்தா.

" ஆமா..அது ஒண்ணுதான் கொறை ச்சல்.." என்று வெறுப்புடன் கூறியபாட்டி, தொடர்ந்து, " இனிமே அப்படி ஏடா கூடமா கூப்டா நான் திரும்பிப் பாக்க மாட்டேன் நியாபகம் வச்சுக் கோங்க !" என்று மிரட்டினார்.

" அடி ரம்மு உன்னை அப்படிக் கூப்டற துல ஒரு கிக் வரதுடி!"

" அப்படியென்ன கிக் வேண்டிக் கெடக்கறது ?..சரி. எதுக்கு இப்போ கூப்பிட்டேள்?"

" இல்ல.ஆமே வெறிச்சோடிக் கெ டக்கு! எல்லாரும் எங்க போயிருக்கா?" " தீம் பார்க்காம். அங்க போயிரு க்கா. நீங்க நன்னா அசந்து தூங் கிண்டிருந்தேள். எழுந்ததும் சொ ல்லச் சொன்னா. "

" நான் மூஞ்சி அலம்பிண்டு வரேன். லோடாவுல காஃபி ரெடி பண்ணி வை. சாப்டுட்டு நாமளும் கெளம்ப லாம்."" எங்க கெளம்பறது ?"

" நம்ம நகர்ல இருக்கற பார்க்குக்குதான். "

"........."

" என்னடி யோசனை? உன்னையாரா வது கிட்நாப் பண்ணிடுவாளோன்னு பயமா?"

" ஆமா...நான் சின்னப்பொண்ணு பாருங்க! என்னத் தூக்கிண்டு போகப் போறா! "

" ஒருவேளை என்கூட வர வெட் கமா...அப்படின்னா ஒண்ணு செய்.நீ முன்னாடி நட.நான் பின்னாடி பத்தடி இடைவெளி விட்டு ஃபாலோ பண்றேன் !"

" ஐயோ ! ஏன் இப்படி அபத்தமாபேச றேள்?"

" சரி என்ன தயக்கம் சொல்லு!"

" இருங்க..மொதல்ல மூஞ்சி அலம் பிண்டு வாங்கோ . சூடா காஃபி போட்டு எடுத்துண்டு வரேன்."

தாத்தா முகம் அலம்பிண்ட கையோடு பாட்டி கொடுத்த காஃபியை ஒரே விழுங்கில் காலி செய்தார். லோட்டா வை அருகில் இருந்த டீபாமீது வைத் தார்.

" இப்போ சொல்லு !"

" வேற ஒண்ணுமில்ல.. இன்னிக்கு சாயங்காலம் டி.வியில நல்ல படம் போடறாளாம்! "

" படம் பேரென்ன?"

" ரம்பையின் காதல். "

" எத்தன தடவை பார்ப்பே?"

" அருமையான படம் ! சுடுகாட்டுல சாமியார் பாடற பாட்டை இன்னிக் கெல்லாம் கேட்டுண்டிருக்கலாம்!"

" அதாவது ' சமரசம் உலாவும் இடமே' ங்கற பாட்டுதானே ?"

" ஆமான்னா.."

" சரிதான் .உனக்கு வயசாகிடித்துங் கறத ப்ரூவ் பண்றே!"

" எப்படி ?"

" சுடுகாட்டப் பத்திப் பேசறயே!"

" ' சமரசம் உலாவும் இடமே'ங்குற பாட்டுல எவ்வளவு தீர்க்கமான அர்த்த ங்கள்! எல்லாக் காலத்துக்கும் பொரு த்தமான சாகாவரம் பெற்ற பாட்டு !"

" சரி..." என்றவர் பாட்டி அருகில் வந்து நின்றார்

" அப்போ நான் டிரஸ் பண்ணிண்டு கெளம்பவா...ரம்பையின் காதலா இல்ல ரம்யாவின் காதலாங்குறத நீ முடிவு பண்ணிக்கோ!"

சட்டென பாட்டியின் கன்னம் வெட்க த்தில் சிவந்தது. கணவரை ஓரக் கண் களால் பார்த்து புன் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

தாத்தாவுக்கு உடனே குஷி வர தன் பொக்கை வாயால் ' உய்' யென்று விசிலடித்தார.



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# வீடு....!



தொலைக்காட்சி பெட்டியில் வானிலை அறிக்கை பற்றியச் செய்தியை படக்காட்சியோடு விளக்கிக் கொண்டிருந்தார் செய்தி வாசிப்பாளர் குள்ளம்மா.

தெற்கிலிருந்து ஊதக்காற்று வீசிக்கொண்டிருந்ததால், அரவிந்துக்கு குளிர் எடுப்பது போல் இருந்தது. ஜன்னலை மூடி திரைசீலையை இழுத்து விட்டான்.

“ ஏங்க... உங்களுக்கு காபி வேணுமா, இல்ல டீ வேணுமான்னு டக்குன்னு சொல்லுங்க. எனக்கு நிறைய வேல இருக்கு” என எந்த வித கவலையும் இல்லாத மனைவியின் கேள்விக்கு, தன் உறவு சார்ந்தவர்களின் வாழும் வீட்டின் நிலையைப் பற்றிய கவலையோடு சிந்தித்து கொண்டிருந்த அரவிந்தின் மனதை புரிந்துகொள்ளாதவளாய், அவளின் சூழல் நன்றாகவே இருந்தது என்பதை அவளின் சொற்களின் வழியே வெளிப்படுத்தினாள்.

“ஏதாவது போடு..” என்று சலிப்பான பதில், அவளை எரிச்சலை அடைய செய்திருக்கும் என்ற மனநிலையோடு, டைல்ஸ் ஜில்லென்று இருந்ததால், பிளாஸ்டிக் சேரியில் உட்கார்ந்து கணினியில் வானிலைப் பற்றியச் செய்தியை சேகரித்துக்கொண்டே கிராமத்தில் வாடகைக்கு விடப்பட்டிருந்த வீட்டின் நிலையைப் பற்றி யோசித்துப் பார்த்தான். ஒருவழியாக வீட்டிற்கு குடிவந்த ஒன்னுவிட்ட தம்பியின் கைபேசி எண்ணைத் தேடி கண்டுபிடித்து “ரகு, இன்னிக்கும் நாளைக்கும் மழை அதிகம் இருக்குன்னு சொல்லியிருக்காங்க. மாடியில தண்ணித் தேங்காமப் பாத்துக்கப்பா” என்று சொல்லிவிட்டு தொடர்பைத் துண்டித்தான் அரவிந்த். தனது அறையின் கதவை தாழிட்டு, ஜன்னலை மூடி, பாய் விரித்து படுத்து கண் அசர நினைத்த அரவிந்தின் மனது கவலையாக இருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன், வயதான பெரியம்மாவைப் பார்த்துவிட்டு வரச் சென்றவன், பெரியம்மா தங்கியிருந்த வீட்டின் சூழ்நிலையைக் கண்ணால் கண்டு கண்கலங்கி, பெரியம்மாவிடம் ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு வந்தாலும், இந்த மழையில் வயதான பெரியம்மா தங்கியிருந்த வீட்டின் சூழ்நிலையை நினைத்து வேதனைபட்டான்.

குப்பையைச் சேகரிக்கும் இடத்திற்கு கொடுக்கும் மரியாதைக்கூட, வயதான மனிதர்கள் தங்குமிடத்திற்குக் கொடுக்க மறுக்கும் மனித தன்மையற்ற, இறக்கமற்ற மனிதர்களின் மீது ஆதங்கப்பட்டுக் கொட்டித் தீர்த்த வார்த்தைகளை நினைத்து வருத்தப்பட்டான் அரவிந்த்.

வீடு, அதுவும் சொந்த வீடு, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்த அரவிந்த், அவர்களின் நிலையிலிருந்து நினைத்துப் பார்த்து வேதனையோடு உட்கார்ந்திருந்தான்.

காற்றின் வேகம் கூடிக்கொண்டே இருந்தது. மழையின் அளவு அதிகமானது. விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு பற்றியச் செய்தியை பார்த்தவுடன், தங்கைக்கு கைபேசியில் தொடர்புகொண்டு “ம்மா வீடு எப்படி இருக்கு...? சுவத்த பூசாம விட்டதினால எங்கேயாவது ஒழுவுதா பாரு. மழை பெய்யும்போது வெளியில வராத. பொறுமையா நடந்து போ. வேகமா நடக்காதா” என சில ஆலோசனைகளை வழங்கியபின், அரவிந்தின் நினைவுகள் சென்னையில் தங்கியிருந்த தம்பியைப் பற்றி நினைக்கத் தொடங்கியது.

சென்னையில் நீர் பிடிப்புப் பகுதியில் குடியிருக்கும் தம்பியின் வீட்டின் நிலையைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தான்.

“டேய் மழை அவ்வளவா சென்னைக்கு இருக்காது. இருந்தும் கவனமா இரு” என கைபேசியில் ஆறுதல் சொல்லிவிட்டு, தூக்கம் வராமல் தொலைக்காட்சியின் முன்வந்து உட்கார்ந்தான். இலங்கையில் பேய் ஆட்டம் ஆடிவிட்டு, தனது திசையை மாற்றிக் கடல் வழியே பயணப்பட்டக் காற்றில் கலந்த மழையின் நிலையையும், அதனால் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் உயிரிழந்த மக்களின் துயரச் செய்தியினைத் தொலைக்காட்சியில் பார்த்த அரவிந்தின் மனதிற்குள் “பலமுள்ள சுவருக்கு உள்ளே உட்கார்ந்துகொண்டு, சூடான தேனீரோடு நொருக்குத் தீனியை திண்ணுக்கொண்டு சுகமா வாழும் மக்களுக்கு, கூரை வீட்டில், மாநகர நடைபாதையில், வாழும் எளிய மக்களின் வாழ்வியல் நிலைப் பற்றி நினைத்துக்கூட பார்க்க நேரம் இல்லாதவர்களாக, தொலைக்காட்சி செய்தியை ஒரு செய்தியாய் பார்த்து பரிதாபப்பட்டு கடந்து போவார்கள்” என்ற நினைவோடு மௌனமாய் தரையில் உட்கார்ந்திருந்தான் அரவிந்த்.



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# Boomer to Gen Z

பாகம் 19



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

அதிகாலை மூன்று மணி முதல் பெண்மணிகள் எழுந்து குளித்துத் தயாரானார்கள்.

வாசுவுக்கும் மாலுவுக்கும் சுமங்கலிகள் சேர்ந்து எண்ணெய் வச்சு சந்தனம் குங்குமம் கொடுத்து மங்கலஸ்நானம் செய்வித்து காசி யாத்திரைக்கு நிகழ்விற்கு எல்லோரும் தயாரானார்கள்.

மாலுவுக்கு தாய் மாமா வாங்கின பொடிக்கலர் பட்டுப்புடவையில் ராமர் நீல பார்டரில் கெட்டி ஜரிகை போட்ட புடவையும், மாமா போட்ட நெளி மோதிரமும் அழகுக்கு அழகு சேர்த்தது. காசி யாத்திரைக்கு யாத்ரா தானத்தில் வாத்தியார் கொடுத்த மூட்டையும், பாகவதம் புத்தகமும், விசிறியும் கையில் எடுத்துண்டு வாசு காசிக்குக் கிளம்பினான்.

கிளம்புவதாவது, இதோ வரதன் ஓடி வந்து காசிக்கு போகவேண்டாம் என்று தடுத்து வாத்தியார் சொல்லச் சொல்லத் திரும்ப சொன்னார்.

காசிக்குப் போகவேண்டாம், என் பெண்ணை மணமுடித்து சம்சாரியாக வேண்டும் என்று கூறி தேங்காய் கொடுத்து உள்ளே அழைத்து வரும் நிகழ்ச்சி கிண்டலும் கேலியுமாக நடந்தேறியது.

அழகப்பா ஸ்டுடியோவலிருந்து வந்திருந்த போட்டோ கிராபர் போட்டோக்களை எடுத்துக் கொண்டிருந்தார். மாலுவையும் வரவழைத்து அவள் கைவிரல்களைப் பிடித்துக் கொண்டு அழைத்து வந்தான். வாத்தியார் வேறு ஏற்ற இறக்கத்துடன் மந்திரங்களை சொல்லிக் கொண்டிருந்தார்.

மாலை மாற்றும் நிகழ்ச்சி. ஒத்தை மாலைகள் தாய் மாமாக்கள் போட இரண்டு மாமிகள் நாதஸ்வரத்துடன் இணைந்து 'மாலை மாற்றினாள், கோதை மாலை மாற்றினாள்' பாடலைப் பாட வந்திருந்த அனைவரும் வட்டமாக குழுமி ரசித்தனர்.

நான்கு பேர் சேர்ந்து சேர்ந்து பெண்ணைத் தூக்குவதும், மாப்பிள்ளையைத் தூக்கிக் கொண்டு பின்னால் செல்வதும், பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்து மாலை மாற்றும் மகிழ்வான தருணங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன.

அனைவரும் முகத்தை நிமிர்த்திக் கொண்டு, முழுவதும் புன்னகையுடன் பார்த்து ஆரவாரமாக ரசித்துக் கொண்டிருந்தனர்.



வாசு மாலுவின் கையைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலுக்கு வந்து விட்டான். ஊஞ்சல் கம்பிகளுக்கு பூ மாலைகள் சுற்றப்பட்டு, பட்டுப்பாய் நான்காய் மடித்துப் போடப்பட்டு இருந்தது. அதன் மீது அமர்ந்து கொண்டார்கள்.

'கணணூஞ்சல் ஆடியிருந்தாள் காஞ்சனமாலை மணமகிழ்ந்தாள்' என்று பாடல் ஆரம்பித்து, ஆளுக்கொரு ராகத்தில் கீர்த்தனைகளை பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் மாறி மாறிப் பாடி அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

'பாலாலே கால் அலம்பி' என்று மாலுவுக்கும் வாசுவுக்கும் பாலும் பழமும் கொடுத்து காலில் பாலால் நனைத்து, புடவைத் தலைப்பை கொண்டுத் துடைத்து விட்டனர்.

மடிசார் புடவைகள்தான் எத்தனை நிறங்கள். அழகாக பாங்காகத் தழைய தழையக் கட்டிக் கொண்டு மிளிர்ந்தார்கள். சுந்தரியும், சக தோழிகளும் பட்டுப் பாவாடைத் தாவணியில் குஞ்சலம் வைத்துப் பிண்ணிக் கொண்டு இங்கும் அங்கும் அலைந்து அழகாக வளைய வந்தார்கள்.

பெண், மாப்பிள்ளைக்கருகில் சிட்டும் சிமிழுமாய் குழந்தைகள் அமர்ந்து கொண்டிருந்தார்கள். பலவந்தமாக உட்கார வைக்கப்பட்ட குழந்தைகள் அழுத வண்ணம் இருந்தனர்.

மஞ்சள் சாதமும், குங்கும சாதமும் சிறிய உருண்டைகளாக உருட்டி பெண்டுகள் நாலு பக்கமும் சுற்றி வீசியெறிவதும், மற்றவர்கள் ஓடி ஓடி நகர்வதும். அப்படியும் சிலர் மீது படுவதும் ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்கிவிடும். படி, அரிக்கஞ்சட்டி, விளக்கு என எடுத்துக் கொண்டு அம்மாக்களும், அத்தையும் மாமியும் சுற்றி வருவது பச்சைப் பிடி சுற்றுவது என்றொரு நிகழ்ச்சியாக அரங்கேறும்.

வாசு மாலுவின் கரம்பற்றி மணமேடைக்கு மெல்ல அழைத்து வந்தான்.

கன்னிகாதானமும், பாணிக்கிரகனமும் மெல்ல ஆரம்பமாயிற்று. சீர்வரிசைகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டது. வெத்திலை பாக்கு, தேங்காய், பழங்கள், பூ மாலைகள், மல்லிகைப் பூ பந்து,அதிரசம், கை முறுக்கு, தேங்கொழல், மைசூர்பாகு, லட்டு, பருப்புத் தேங்காய் வகைகள், பித்தளை பாத்திர வகைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், குடம், குத்துவிளக்கு என வரிசையாக வைக்கப்பட்டது.

நாத்தனார் விளையாடல் சீரும் மிக அழகாக வைக்கப்பட்டது.

தொடரும்...

# "ஓம்" எனும் மந்திரம் - உடலுக்குத் தேவையான ஆற்றல் உள்ளது





1. உலகளாவிய ஒலியான ஓம் என்னும் மந்திரம் ' ஆ ' , 'ஓ ' ,'ம்' ஆகிய மூன்று அசைகளால் உருவானது .

நாம்

'ஆ' என்று ஓசை எழுப்பும்போது உடம்பின் கீழ் பகுதி முதல் வயிற்றுப் பகுதிவரை இயக்கம் பெறுகிறது.

'ஓ' என்று உச்சரிக்கும்போது மார்புப் பகுதிகள் இயக்கம் பெறுகின்றன.

'ம்' என்று ஒலி முகத்தசைகள் மற்றும் மூளைப் பகுதியைத் தூண்டும்.

2. 'ஓம்' எனும் மந்திரம் நம்மை தியான நிலைக்குக் கொண்டு செல்கிறது. உடலையும் மனதையும் தளர்த்தி, ஆற்றலை சேமிக்கச் செய்கிறது.

3.எண்ண ஓட்டங்களையும், கவனச்சிதறல்களையும் சரிப்படுத்தி மனதை ஒருமுகபடுத்துகிறது.

4. ஓம் என்னும் மந்திரத்தை, 11 முதல் 18 முறை உச்சரித்துவிட்டுச் தூங்கசென்றால், ஆழமான உறக்கம் கிடைக்கும். ஆழ்ந்த உறக்கத்தில்தான் மூளைக்கு அவசியமான 'மெலடோனின்' என்ற ஹார்மோன் சுரக்கிறது.

5. இது உங்களை எதிர்மறை எண்ணங்களில் இருந்து வெளிகொண்டுவந்து நேர்மறை எண்ணங்களைப் பெருக்குகிறது.

6. இந்த மந்திரத்தை உச்சரிப்பதால் உடலுக்கு அதிகப்படியான ஆக்சிஜன் கிடைப்பதோடு, ரத்த ஓட்டமும் சீராகிறது. இதயமும் செரிமான மண்டலமும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவுகிறது.

7. கவலைகள் மற்றும் பதற்றத்தால் பல நேரங்களில் கோபம், வருத்தம், விரக்தி, ஏமாற்றம் ஆகியவற்றை நாம் வெளிப்படுத்துகிறோம். பின்பு, அதன் விளைவுகளை எண்ணி வருந்துகிறோம். 'ஓம்' என்று உச்சரித்துவர நாளடைவில் நம் எண்ணங்களின் மீது சுயக்கட்டுப்பாடு அதிகரிக்கிறது. இதனால், தேவையற்ற சிந்தனைகள், எண்ணங்கள், உணர்வுகள் உருவாவது தடுக்கப்படுகிறது.

8. சோர்வாகவும், களைப்பாகவும், பணியில் சரியான கவனம் செலுத்த முடியாமலும் இருப்பவர்கள், தினமும் காலை எழுந்தவுடன் 20 நிமிடங்கள் 'ஓம்' என்ற மந்திரத்தைச் சொல்லிவர மூளையில் 'எண்டார்பின்' என்னும் ஹார்மோன் சுரப்பு அதிகரிக்கிறது. இதனால், நாள் முழுதும் உற்சாகமான, மகிழ்ச்சியான மனநிலை கிடைக்கும்.

9. 'ஓம்' மந்திரத்தை தொடர்ந்து சொல்லிவர, ஹார்மோன் குறைபாடுகள் சரியாகும். மாதவிடாய் காலங்களில் மற்றும் மெனோபாஸ் காலங்களில் மன ஊசலாட்டம் (மூட் ஸ்விங்ஸ்) கட்டுப்படும்.

10. 'ஓம்' என்று தொடர்ந்து உச்சரித்துக்கொண்டிருந்தால், உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைத்து, நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாவதுடன், இன்சுலின் சுரப்பும் சீராக உள்ளது என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிந்துள்ளது.



- சிவசக்தி
நாப்பிராம்பட்டி,
ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்

# தினம் ஒரு தலைவர்கள் அருணா ஆசப் அலி வரலாறு

அருணா ஆசஃப் அலி ( நீ கங்குலி ) ( வங்காள உச்சரிப்பு: 16 ஜூலை 1909 – 29 ஜூலை 1996) ஒரு இந்திய கல்வியாளர், அரசியல் ஆர்வலர் மற்றும் வெளியீட்டாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்ற இவர் , 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயின் கோவாலியா டேங்க் மைதானத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றியதற்காக பரவலாக நினைவுகூரப்படுகிறார் . சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் அரசியலில் தீவிரமாக இருந்தார், டெல்லியின் முதல் மேயரானார்.

## ஆரம்ப கால வாழ்க்கை

அருணா அசாஃப் அலி ஜூலை 16, 1909 அன்று பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாபில் உள்ள கல்காவில் (இப்போது ஹரியானா , இந்தியா) ஒரு வங்காள பிராமண குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை உபேந்திரநாத் கங்குலி கிழக்கு வங்காளத்தின் (இப்போது வங்காளதேசம் பரிசால் மாவட்டத்தைச் சேர்ந்தவர், ஆனால் ஐக்கிய மாகாணத்தில் குடியேறினார். அவர் ஒரு உணவக உரிமையாளராக இருந்தார். அவரது தாயார் அம்பலிகா தேவி, பல பிரம்மோ பாடல்களை எழுதிய புகழ்பெற்ற பிரம்மோத் தலைவர் த்ரைலோக்யநாத் சன்யாலின் மகள் . உபேந்திரநாத் கங்குலியின் தம்பி தீரேந்திரநாத் கங்குலி (டிஜி) ஆரம்பகால திரைப்பட இயக்குனர்களில் ஒருவர். [ 4 ] மற்றொரு சகோதரர் நாகேந்திரநாத், நோபல் பரிசு வென்ற ரவீந்திரநாத் தாகூரின் ஒரே மகள் மீரா தேவியை மணந்த பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தார் . [ 5 ] அருணாவின் சகோதரி பூர்ணிமா பானர்ஜி இந்திய அரசியலமைப்பு சபையின் உறுப்பினராக இருந்தார் .

அருணா லாகூரில் உள்ள சேக்ரட் ஹார்ட் கான்வென்ட்டிலும் , பின்னர் நைனிடாலில் உள்ள ஆல் செயிண்ட்ஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார் . பட்டம் பெற்ற பிறகு, கல்கத்தாவில் உள்ள கோகலே நினைவுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார் . காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஆசஃப் அலியை அலகாபாத்தில் சந்தித்தார் . மதம் மற்றும் வயது அடிப்படையில் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி (அவர் ஒரு முஸ்லிம் மற்றும் அவரை விட 20 வயது மூத்தவர்) அவர்கள் 1928 இல் திருமணம் செய்து கொண்டனர்.

1928 செப்டம்பரில் ஆசாஃப்பும் நானும் திருமணம் செய்துகொண்டபோது என் தந்தை இல்லை. என் தந்தைவழி மாமா நாகேந்திரநாத் கங்குலி, ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர், தன்னை என் பாதுகாவலராகக் கருதினார், அவர் உறவினர்களிடமும் நண்பர்களிடமும், அவரைப் பொறுத்தவரை நான் இறந்துவிட்டேன் என்றும், அவர் என் ஷ்ரத்தாவைச் செய்துவிட்டார் என்றும் கூறினார்.

## வாழ்க்கை மற்றும் தொழில்

## இந்திய சுதந்திர இயக்கத்திற்கு பங்களிப்பு

இந்திய சுதந்திர இயக்கத்தில் அருணா ஆசஃப் அலி முக்கிய பங்கு வகித்தார். ஆசஃப் அலியைத் திருமணம் செய்து கொண்ட பிறகு இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார் , உப்பு சத்தியாக்கிரகத்தின் போது பொது ஊர்வலங்களில் பங்கேற்றார் . 21 வயதில் அவர் ஒரு நாடோடி என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் , எனவே 1931 ஆம் ஆண்டு காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். மற்ற பெண் சக கைதிகள் அவர் விடுவிக்கப்படும் வரை வளாகத்தை விட்டு வெளியேற மறுத்து, மகாத்மா காந்தி தலையிட்ட பின்னரே சரணடைந்தனர் . ஒரு பொதுப் போராட்டம் அவரை விடுதலை செய்தது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முக்கியத்துவம் பெறுதல் ஆகஸ்ட் 8, 1942 அன்று, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாய் அமர்வில் வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றியது . அரசாங்கம் முக்கிய தலைவர்களையும் காங்கிரஸ் செயற்குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் கைது செய்து , இயக்கத்தை வெற்றியிலிருந்து தடுக்க முயன்றது. ஆகஸ்ட் 9 அன்று அமர்வின் மீதமுள்ள பகுதிக்கு இளம் அருணா ஆசஃப் அலி தலைமை தாங்கினார் மற்றும் கோவாலியா டேங்க் மைதானத்தில் காங்கிரஸ் கொடியை ஏற்றினார். இது இயக்கத்தின் தொடக்கத்தைக் குறித்தது. அமர்வில் காவல்துறையினர் சட்டமன்றத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆபத்தை எதிர்கொண்ட துணிச்சலுக்காக அருணா 1942 இயக்கத்தின் ராணி என்று அழைக்கப்பட்டார், மேலும் அவரது பிற்காலங்களில் சுதந்திர இயக்கத்தின் கிராண்ட் ஓல்ட் லேடி என்று அழைக்கப்பட்டார் . நேரடித் தலைமை இல்லாத போதிலும், இந்தியாவின் இளைஞர்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடாக, நாடு முழுவதும் தன்னிச்சையான போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அவரது பெயரில் ஒரு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது, ஆனால் கைது செய்வதைத் தவிர்க்க அவர் தலைமறைவாகி 1942 ஆம் ஆண்டு ஒரு தலைமறைவு இயக்கத்தைத் தொடங்கினார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு விற்கப்பட்டன. இதற்கிடையில், ராம் மனோகர் லோஹியாவுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சியின் மாத இதழான இன்குலாப் பத்திரிகையையும் அவர் ஆசிரியராகக் கொண்டிருந்தார். 1944 ஆம் ஆண்டு இதழில், வன்முறை மற்றும் அகிம்சை பற்றிய வீண் விவாதங்களை மறந்து புரட்சியில் சேருமாறு இளைஞர்களை அவர் ஊக்குவித்தார் . ஜெயபிரகாஷ் நாராயண் மற்றும் அருணா ஆசஃப் அலி போன்ற தலைவர்கள் "காந்தியின் அரசியல் குழந்தைகள் ஆனால் கார்ல் மார்க்ஸின் சமீபத்திய மாணவர்கள்" என்று விவரிக்கப்பட்டனர். அவரைப் பிடித்ததற்காக அரசாங்கம் 5,000 ரூபாய் வெகுமதியை அறிவித்தது. அவர் நோய்வாய்ப்பட்டு டெல்லியில் உள்ள கரோல் பாக் நகரில் உள்ள டாக்டர் ஜோஷி மருத்துவமனையில் சிறிது காலம் மறைந்திருந்தார். மகாத்மா காந்தி, மறைவிலிருந்து வெளியே வந்து சரணடையுமாறு அவருக்கு கையால் எழுதப்பட்ட குறிப்பை அனுப்பினார் - அவரது பணி நிறைவேறியதாலும், வெகுமதித் தொகையை ஹரிஜன நலனுக்காகப் பயன்படுத்த முடியும் என்பதாலும் . சுதந்திரத்திற்குப் பிந்தைய மற்றும் மேயர் பதவி காங்கிரஸ் கட்சிக்குள் சோசலிச சார்புகளைக் கொண்ட ஆர்வலர்களுக்கான ஒரு குழுவான காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார் . சோசலிசத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னேற்றத்தில் ஏமாற்றமடைந்த அவர் 1948 இல் சோசலிஸ்ட் கட்சி என்ற புதிய கட்சியில் சேர்ந்தார். இருப்பினும், அவர் எடததா நாராயணனுடன் அந்தக் கட்சியை விட்டு வெளியேறினார், மேலும் அவர்கள் ரஜனி பால்மே தத்துடன் மாஸ்கோவிற்குச் சென்றனர் . இருவரும் 1950 களின் முற்பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். தனிப்பட்ட முறையில், 1953 இல் ஆசஃப் அலி இறந்தபோது அவர் துக்கமடைந்தார். 1954 ஆம் ஆண்டில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மகளிர் பிரிவான இந்திய மகளிர் தேசிய கூட்டமைப்பை உருவாக்க அவர் உதவினார் , ஆனால் 1956 ஆம் ஆண்டில் நிகிதா குருசேவ் ஸ்டாலினை கைவிட்டதைத் தொடர்ந்து கட்சியை விட்டு வெளியேறினார் . 1958 ஆம் ஆண்டில், அவர் டெல்லியின் முதல் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். டெல்லியில் சமூக நலன் மற்றும் மேம்பாட்டிற்காக கிருஷ்ண மேனன், விம்லா கபூர், குரு ராதா கிஷன் , பிரேம்சாகர் குப்தா, ரஜனி பால்மே ஜோதி, சர்லா சர்மா மற்றும் சுபத்ரா ஜோஷி போன்ற அவரது சகாப்தத்தின் சமூக ஆர்வலர்கள் மற்றும் மதச்சார்பற்றவர்களுடன் அவர் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்தார்.

கோவா விடுதலை இயக்கம் டிசம்பர் 1960 இல், அவர் அப்போதைய இந்திய உள்துறை அமைச்சர் பண்டிட் பந்தை புது தில்லியில் சந்தித்து , கோவாவின் விடுதலைக்காக இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திய ஒரு குழுவில் ஒருவராக இருந்தார். அந்தக் குழுவில் எக்லிட்டோ டி'சோசா, ஐரீன் ஹெரேடியா , விஸ்வநாத் லாவண்டே , லம்பேர்ட் மஸ்கரென்ஹாஸ் , ஜார்ஜ் வாஸ் மற்றும் பெர்த்தா பிராகன்சா ஆகியோர் அடங்குவர் . பதிப்பகத் துறையில் தொழில் அவரும் நாராயணனும் லிங்க் பதிப்பகத்தைத் தொடங்கி, அதே ஆண்டில் பேட்ரியாட் என்ற தினசரி செய்தித்தாளையும், லிங்க் என்ற வார இதழையும் வெளியிட்டனர். ஜவஹர்லால் நேரு , கிருஷ்ண மேனன் மற்றும் பிஜு பட்நாயக் போன்ற தலைவர்களின் ஆதரவின் காரணமாக இந்த வெளியீடுகள் மதிப்புமிக்கதாக மாறியது . பின்னர், தனது தோழர்களின் நம்பிக்கையை பேராசையால் கைப்பற்றியதால் அதிர்ச்சியடைந்த உள் அரசியல் காரணமாக, பதிப்பகத்தை விட்டு வெளியேறினார். அவசரநிலை குறித்த சந்தேகங்கள் இருந்தபோதிலும் , அவர் இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தியுடன் நெருக்கமாக இருந்தார் . அவர் "ஐடியாஸ் ஆஃப் எ நேஷன்" என்ற புத்தகத்தை எழுதினார் , இது பின்னர் இந்தியாவின் அறுபதாம் ஆண்டு சுதந்திரத்தை நினைவுகூரும் வகையில் பெங்குயின் அவர்களின் வேர்ட்ஸ் ஆஃப் ஃப்ரீடம் தொடரிலும் வெளியிடப்பட்டது

இறப்பு

அவர் ஜூலை 29, 1996 அன்று 87 வயதில் புது தில்லியில் இறந்தார்.





# 10 நாளில் திருமணம்.. படத்தில் இருந்து விலகிய ராஷ்மிகா

நடிகை ராஷ்மிகா தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவை காதலித்து வரும் நிலையில் வரும் பிப்ரவரி 26ம் தேதி அவர்கள் திருமணம் பிரம்மாண்டமாக நடைபெற இருக்கிறது.

உதய்பூர் அரண்மனையில் திருமணத்தை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. திருமணத்திற்கு இன்னும் 10 நாட்கள் கூட இல்லாத நிலையில் ராஷ்மிகா ஒரு முன்னணி பாலிவுட் ஹீரோ படத்தில் இருந்து விலகி இருக்கிறார்.

10 நாளில் திருமணம்.. திடீரென முக்கிய ஹீரோ படத்தில் இருந்து விலகிய ராஷ்மிகா | Rashmika Quit Shahid Kapoor Film Before Marriage விலகினார்

Badhaai Ho பட புகழ் இயக்குனர் அமித் ஷர்மா அடுத்து ஷாஹித் கபூர் மற்றும் ராஷ்மிகா ஜோடியாக நடிக்கும் romcom படத்தை இயக்குவதாக இருந்தார்.

அந்த படத்தில் இருந்து தான் ராஷ்மிகா வெளியேறி இருக்கிறார். திருமணம் நடப்பதால் அவர் இந்த முடிவை எடுத்திருப்பதாக கூறப்படுகிறது.





சப்த சாகர தாச்சே எல்லோ படத்தின் மூலம் பிரபலமானவர் நடிகை சைத்ரா ஜே. அச்சர். இவர் 3BHK படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். இதை தொடர்ந்து கடந்த வாரம் வெளியான மை லார்ட் படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். இப்படத்தில் இவருடைய நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை சைத்ரா அச்சர் தற்போது தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்துள்ளார்.

# தூக்கம் வராமல் தவிக்கிறேன் நடிகர் புலம்பல்



ஆர்.ஜே.வாக பணியாற்றி, பின் யூடியூப் சேனல்கள் மூலம் ரசிகர்களிடையே பிரபலமானார் ஷா ரா. 2017-ஆம் ஆண்டு வெளியான மாநகரம் மற்றும் மீசைய முறுக்கு ஆகிய திரைப்படங்கள் மூலம் நடிகராக அறிமுகமானார். தொடர்ந்து கோமாளி, நான் சிரித்தால், ஓ மை கடவுளே உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்துள்ளார். கடைசியாக அதர்வா நடிப்பில் வெளியான தணல் படத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவு செய்துள்ளார். அதில்,

"4 மணிக்கு தூக்கம் வராமல் சுற்றிக்கொண்டு இருக்கிறேன். இப்போது படம் பேசுபவர்கள் எல்லாம் இன்ஸ்டாவில் உங்களுக்கு எவ்வளவு ஃபாலோவர்ஸ் (பின்தொடர்பவர்கள்) இருக்கிறார்கள் என்றுதான் கேட்கிறார்கள். அதை பார்த்துதான் சம்பளம் பேசுகிறார்கள். இன்ஸ்டாவில் ஃபாலோவர்ஸை வளர்ப்பதற்கு என்னிடம் தகுதி இல்லையே. எனக்கு கூந்தல் கிடையாது, மொழு மொழு கன்னங்கள் கிடையாது. முகம் முழுவதும் தாடி, அதுவும் நரைத்து போயுள்ளது.

நெஞ்சில் முழுவதும் முடி. எனக்கு ரீல்ஸ் பண்ணவும் பிடிக்காது. என்ன செய்து இன்ஸ்டாவில் ஃபாலோவர்ஸை வளர்ப்பது என்று தெரியாமல், தூக்கம் வராமல், தியானம் செய்தால் எதாவது ஐடியா கிடைக்கும் என்று நினைத்தால், அது செய்தாலும் எதுவும் தோணவில்லை. இது என் மூளைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

ஃபாலோவர்ஸை ஏற்றுவதற்கு என்னிடம் கவர்ச்சி இல்லையே. நான் என்ன செய்வேன், எதாவது ஐடியா இருந்தால் கீழே (comment-ல்) சொல்லுங்கள்". என பேசியுள்ளார்.

இதனை பார்க்கும் நெட்டிசன்கள் பலரும் திறமையான நடிகருக்கு இப்படி ஒரு நிலையா என கமெண்ட் செய்து வருகின்றனர். மேலும் இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# மரகத நாணயம் 2 படப்பிடிப்பின் பூஜை வீடியோவை வெளியிட்ட படக்குழு



தமிழ் திரையுலகில் பேண்டஸி மற்றும் நகைச்சுவை இணைந்து வெற்றிகரமாக உருவான சில படங்களில், ஒன்று மரகத நாணயம். நடிகர் ஆதி மற்றும் நிக்கி கல்ராணி நடிப்பில், இயக்குநர் ஏ.ஆர். கே. சரவணன் இயக்கத்தில் வெளியான இந்த படம் வசூல் மற்றும் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது.

இதனைத்தொடர்ந்து தற்போது இதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. இரண்டாம் பாகத்தையும் ஏகேஆர் சரவணன்தான் இயக்குகிறார். இதில் ஆதி, நிக்கி கல்ராணி, பிரியா பவானி சங்கர், முனிஷ்காந்த், சத்யராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளார்.

பேஷன் ஸ்டுடியோஸ், அக்செஸ் ஃபிலிம் ஃபேக்டரி இணைந்து படத்தை தயாரித்துள்ளது. அண்மையில் மரகத நாணயம் 2' படத்தின் பூஜை நடைபெற்றது.பூஜையில் நடிகர் கார்த்தி, இயக்குநர் வெங்கட் பிரபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

இந்நிலையில், 'மரகத நாணயம் 2' படப்பிடிப்பின் பூஜை வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.



வெந்து தணிந்தது காடு படத்தின் மூலம் தமிழில் அறிமுகம் ஆனவர் சித்தி இத்னானி . அதற்கு பிறகு அவர் நடித்த காதர் பாஷா படம் தோல்வி அடைந்தது.

அதன் பின் அவர் ரெட்ட தல என்ற படத்தில் நடித்து இருந்தார். அருண்விஜய் ஜோடியாக அவர் நடித்து இருந்த இந்த படம் கடந்த வருடம் இறுதியில் ரிலீஸ் ஆகி இருந்தது.

சித்தி இத்னானி தற்போது அழகிய உடையில் கியூட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க பாருங்க.

# நடிகை பிரத்யுஷா மரண வழக்கு: 23 ஆண்டுகளுக்குப் பிறகு உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



1999 ஆம் ஆண்டு வெளியான மனுநீதி படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் நடிகை பிரதியுஷா அறிமுகமானார். ஐதராபாத்தைச் சேர்ந்த பிரத்யுஷா தெலுங்கு மற்றும் தமிழ் என பல படங்களில் நடித்துள்ளார். பிரபுவுடன் சூப்பர் குடும்பம், விஜயகாந்த்துடன் தவசி, ராமராஜனுடன் பொன்னான நேரம், பாரதிராஜாவின் கடல்பூக்கள் ஆகிய படங்களில் பிரத்யுஷா நடித்துள்ளார்.

சினிமாவில் உச்சத்தில் இருக்கும்போதே சித்தார்த் ரெட்டி என்பவரை பிரத்யுஷா காதலித்து வந்தார். ஆனால் அவர்களின் காதலுக்கு சித்தார்த் ரெட்டி குடும்பத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதனால் 2002 ஆம் ஆண்டு சித்தார்த் ரெயி மற்றும் பிரத்யுஷா இருவரும் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்ய முயன்றனர். இதில் சித்தார்த் உயிர் பிழைக்க பிரத்யுஷா உயிரிழந்தார்.

சினிமாவில் உச்சத்தில் இருந்த பிரத்யுஷா 22 வயதில் உயிரிழந்தது ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து தற்கொலைக்கு தூண்டுதல் மற்றும் தற்கொலை முயற்சி ஆகிய பிரிவுகளின் கீழ் சித்தார்த்த ரெட்டிக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, டிசம்பர் 2011-ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் சித்தார்த் ரெட்டியின் தண்டனையை 2 ஆண்டுகளாக குறைத்து ரூ.50,000 அபராதமும் விதித்தது.

இதனால் விரக்தியடைந்த பிரத்யுஷாவின் தாய் 2012 - ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தை நாடினார். 23 ஆண்டுகளாக இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில், இந்த வழக்கில் சித்தார்த் ரெட்டி குற்றவாளி என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதன்படி 4 வாரங்களில் சித்தார்த் ரெட்டி சரணடைய வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் அவருக்கு குறைப்பட்ட 2 ஆண்டுகள் தண்டனைக்கான உத்தரவு ரத்து செய்யப்பட்டு 5 ஆண்டுகள் சிறை தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.


Happy Birthday
JOSEPH EDISON


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
www.tamilnaduepaper.com
www.anandabhaskar.com
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com






## அவள்

தனிமைத்தேடி
அமர்ந்தப்படி~உன்னுள்
புதுமைக்காணவேண்டும்,,,,

நாணம் வழியும்~என்
வார்த்தைகளை~உனக்கு
தானம் செய்ய வேண்டும்,,,,

விடியல் இல்லாத
குடிலில் உந்தன் மடியில்
மடிந்துப்போகவேண்டும்,,,

காதல் தேடும்
இளசு
களெல்லாம்
நம்மை
கவிதைப்பாட
வேண்டும்,,,!



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## தமிழ் எங்கள் தேசம்

அடிமை குடும்பம்...
அரசு பள்ளி.... பனிவான
குணம்...படைத்த பல
வரலாறு....
எதிர் படையை நடுங்க
வைத்த திறமை...
இத்தனைக்கும் ஒரு திமிர்
தமிழ்,தமிழன்...!

மொழியின் வீரம் தமிழ்...
மனித குழத்தின் வீரம்
தமிழன்..பொருமையின்
புகலிடம் தமிழ்நாடு...

வந்தவரை எல்லாம் வாழ
வைக்கும் இது எங்கள்
வீடு.... தீய போர்வையில்
இருப்போரே...
எங்கள் நாட்டை விட்டு ஓடு...

இது எங்கள் தேசம்...
தமிழ் தேசம்....
இனி நர்மணம் எங்கும்
வீசும்... இதுவே நாங்கள்
சுவாசிக்கும்
வாசம்....
வாசம்....!!



**பொன். கருணா**
நவி மும்பை



## ஹைக்கூ ! சென்ரியு !

எண்ணிலடங்காதவை
எண்ணம் கவர்ந்தவை
மலர்கள் !

மதித்து ரசிப்பவர்களுக்கு
மகிழ்வைப் போதிக்கும்
மலர்கள் !

கோபம்கொள்வதில்லை
ஊடல் கொள்வதில்லை
மலர்கள் !

வரவேற்கின்றன
வண்டுகளை மலர்கள் !
தேன் உண்டால் தேம்பி
அழுவதில்லை மலர்கள் !

கண் கொள்ளாக் காட்சி
கண் கவர் மாட்சி மலர்கள்!

கர்வம் இல்லை
கொள்ளை அழகு மலர்கள் !

இல்லவே இல்லை
போட்டி பொறாமை மலர்கள் !

கூர்ந்துப் பார்த்தால்
எல்லாம் அழகு மலர்கள் !

ரசித்துப் பார்த்தால்
அழகோ அழகு
எருக்கம் மலர்கள் !

பறக்காமல்
பட்டாம் பூச்சி ஓ மலர் !



**கவிஞர் இரா .இரவி !**



ஏனடி வெட்கப்படுகிறாய்?
கை மாத்தாய்வெறும்
ஐந்து முத்தங்கள் தானடி
கேட்டேன்!!

உலகிலேயே தலைசிறந்த
வைத்தியமுறை
எதுவென்று கேள்வி
எழுப்புகிறாய்? எப்படி
சொல்வேனடி கட்டிப்பிடி
வைத்தியம் சிறந்ததென்று!!

உதட்டில் காயம்
என்ன செய்ய வேண்டும்
என்கிறாய் கட்டிப்பிடித்து
உன் உதடுகளால்
முதலுதவி செய் என்றேன்!

என்னை காயப்படுத்த
நீ தேவையில்லை
உன் நினைவுகளே போதும்!

கோடைக்கு பாடை கட்டலாம்
கொஞ்சம் சிரி மார்கழி
வாடை வீசட்டும் ஒரு
தொடர்வண்டிபோல
பேசிக் கொண்டே இரு
மனதோடு
மழைக்காலம் தொடரட்டும்!

உன்னோடு
பேசிக்கொண்டிருக்கும்
கடும் வெய்யில் காலம் கூட
எனக்கு சில்லென சிந்தி
விடும் அடைமழைக் காலம்
தானடி!

தேவதையொருத்தி
என்ன வரம் வேண்டும்
என்றாள் உன்னை
காதலிப்பதை தவிர
வேறேதும் வேண்டாம்
என்றேன்

புனிதம் எதிலுமில்லை
காமத்திற்கு பிறகு
திலகமிடும் நெற்றியில்
இடும்
ஒற்றை எச்சில்
முத்தத்தில்
மிச்சமிருக்கிறது
புனிதம்!!



**லி.நெளஷாத் கான்**



1. திறமை என்பது
கடவுளால் கொடுக்கப்பட்டது
அடக்கத்துடன் இருங்கள்
புகழ் என்பது மனிதர்களால்
கொடுக்கப்பட்டது
நன்றியுடன் இருங்கள்
அகம்பாவம் என்பது
நமக்கு நாமே
கொடுத்துக்கொண்டது
எச்சரிக்கையுடன் இருங்கள்

2.பணம் உள்ளவன்
சொத்துக்காக அலைகிறான்
பணம் இல்லாதவன்
சோத்துக்காக அலைகிறான்

3.ஒரு பஸ்ஸின் புலம்பல்
நான் ஜாதி மதம் பார்க்காமல்
எல்லோரையும் ஏற்றி
சென்றேன் ஆனால் நீங்கள்
ஜாதி என்ற பெயரில் என்
மீது கல் எறிந்து என்னை
புண்ணாக்கி விட்டீர்கள்

4.பிரியாணி அரிசியை
விளைய வைத்துவிட்டு
பழைய சோறு சாப்பிடும்
நபர்தான் விவசாயி

5.என்னை பார் யோகம்
வரும் என்று கழுதை படமும்
சொல்லவில்லை குபேர
பொம்மையும்
சொல்லவில்லை
மனிதனாகவே
சொல்லிக்
கொண்டான்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## உன்னால்... !

கோர்வையாக தமிழ்
வார்த்தைகள் எழுதத்
தெரியாத என்னை...
கவிதை எழுத வைத்த
பெருமை உன்னை சார்ந்தது!

பரட்டை தலையும் மழிக்காத
தாடியுமாய் கண்ணாடியில்
முகம் பார்க்காமல் திரிந்த
என்னை ஒரு நாளுக்கு
இரு முறை தாடியை சவரம்
செய்து முடியை அடக்கி
வைத்த பெருமை
உன்னுடையது !

அணியும் ஆடை எங்கே
கிழிந்துள்ளது என்று கூட
கவனிக்காமல் ஆடை
அணிந்த என்னை பிறர்
கவனிக்கும் வண்ணம்
ஆடை அணிய வைத்த
பெருமையும் உன்னுடையது..

எல்லா பெருமையும்
உன்னைச் சார்ந்தது தான்....
இப்போதும்...
முன்பை போலவே
திறிகிறேன்..... பரட்டை
தலை, தாடி, கிழிந்த ஆடை....
வெற்று காகிதங்களில்
ஏதேதோ கிறுக்கியபடி....
அன்பை நடித்து ஏமாற்றி
என்னை
கிறுக்கனாக்கிய
பெருமையும்
உன்னை
சார்ந்ததுவே !



**எம்.பி. தினேஷ்.**
கோவை

## வாழ்வியல்...

இழந்த அனைத்தையுமே..
மீட்டெடுக்க... இயலும்...

நம்பிக்கை.... ஒன்றை மட்டும்
இழக்காமல் இருந்தால்...

மல்லிகை பாதையில்...
நடைபோட...
எண்ணியதில்லை...

கருவேலம் பூக்களாவது...
தென்படட்டும்... கருவேலம்
முட்கள் தவிர்த்து...

எங்கள் கரடுமுரடான
பாதையில்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

ஆன்மாவை விற்று
ஆன்மீகத்தை விலைக்கு
வாங்கும் நேரம்!

பக்தி உணர்வான
கொண்டாட்டங்களை காண
முடிவதில்லை . பரவசத்துடன்
ஆட்டம் போடும் கார்ப்பரேட்
பக்திகளை ஆவலுடன்
பார்க்க முடிகிறது .

சிவராத்திரி, மயான
கொள்ளை எல்லாமே
பொழுதுபோக்கிற்காக
சாக்குப் போக்கு
காட்டுவதாகவே உள்ளது .

உண்மையையும்
ஆன்மாவையும்
தொலைத்துவிட்டு,
கடவுளை விலை கொடுத்து
வாங்கியதில்
சாமானியர்கள்
பயபக்தியின்றி
வேடிக்கை
பார்ப்பது
சாதாரணமாகி
விட்டதோ!.



**எறும்பூர் கை.செல்வகுமார்,**
செய்யாறு.

கும்வெயில்
நிழலைத்தேடி விரைந்த
காலுக்கு எங்கும்
மரமேயில்லை.
தூரத்திலொரு மரம் யாரோ
உட்கார்ந்திருந்தார்கள்
தூரம் அவ்வளவுதான்
காட்டும் சக்கரமாக மாறிய
கால்கள் இருந்தது புத்தர்
சிலையைத்தள்ளி உட்காரு
என்றேன்.
நடக்க
ஆரம்பித்தார்
இடமெல்லாம்
வனமாக
மாறியிது.



**துங்கன்**



## உன்னை அறியலாம்

அன்பின் போது அன்னையை
அறியலாம் தியாகத்தின்
போது தந்தையை அறியலாம்
நல்வழிகாட்டுதலின்
போது குருவை அறியலாம்
ஆபத்தின் போது நண்பனை
அறியலாம் சோதனைகளின்
போது
சொந்தங்களை
அறியலாம்
முயற்சிகளின்
போதுதான்
நீ உன்னை
அறியலாம் !



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

அன்னை திட்டினாலோ–
இல்லை அப்பா
ஏமாற்றினானோ– புரியலை

பள்ளிக்கு செல்ல
கவலையோ– இல்லை

படிப்பினைப் பார்த்து
பயமோ– ஏதும் அறியாமல்

இந்த நொடி–
என் நிம்மதி
என அழகாய்
உறங்குகிறது
குழந்தை!!!!



**பானுஶ்ரீ**
பாண்டிச்சேரி

## போதைப்பொருள் தடுப்பு

போதையை தவிர்
வாழ்வை தழுவு !

நிம்மதி வேண்டுமா
போதையை விடு !

உன் உயிருக்கு நீனே
எதிரியாகாதே !

போதை தரும் இன்பம்
தற்காலிகம் அழிவு நிரந்தரம்!

வேண்டாம் போதை
வேண்டும் பாதை!

போதைக்கு அடிமையாகாதே
வாழ்க்கையை
தொலைக்காதே!

உன் எதிர்காலம் உன் கையில்
போதையை தவிர் !

மதுவும் புகையும் மனிதனுக்கு
பகை உன் குடும்பத்திற்கு
சிதை !

வாழ்க்கை என்ற பூந்தோட்டம்
போதையால் அது போராட்டம்!

போதை அது நாம் காசு
கொடுத்து வாங்கும்
வேதனை!

சிந்தித்து செயல்படு போதை
உனக்கு எதற்கு !

போதை அது சாவின் பாதை!

போதையில் மோதி பாதையை
மாற்றாதே!

அன்பின் மேல் போதை
கொண்டால் ஆயுள் கூடும் !

போதை மேல் போதை
கொண்டால் அழிவே கூடும்!
மேதையை அழிக்கும்
போதையை ஒழிப்போம் !

புகைத்தலின் பூரிப்பு
வாழ்க்கையின் பாதிப்பு !

வாழ்க்கை என்பது வரம்
போதை அதில் விஷம்!

உயிரை குடிக்கும் மாயவலை
உறவை அறுக்கும் கூறுவாள்!

நாளை நமதே என எழுந்திடு
நச்சுப்பழக்கம் துறந்திடு !

உழைப்பால் உயரத் துணிந்திடு
உன்னத வாழ்வை பெற்றிடு!

மயக்கம் தரும் மரண வலை
அறிவை அளிக்கும் நச்சு
அலை !

நிமிட இன்பம் நிலையான
துன்பம் மறந்து விடுவாய்
இந்த துயரம்!

விழிப்படைவோம் வாழ்வை
காப்போம் !

நிமிடப் பொழுதின்
போதைக்காக நித்திய வாழ்வு
இழக்காதே !

பணத்தை பறிக்கும் குணத்தை
அளிக்கும் !

பிணமாய் உன்னை வீதியில்
தள்ளும் ! தற்காலிக இன்பம்
தற்கொலைக்கு சமம் !

போதை
பொருளை
தடுப்போம்
நலமுடன்
வாழ்வோம் !



**பெ.திருமுகம்**
மணமேல்குடி

காட்சி அமைக்கப்பட்ட
கனவுகள் கருவிழிகளால்
முட்டி மோதி கலங்கி
நினைவுகளால்
நிதர்சனமானாலும்
முயற்சிகள்
தோற்றாலும்
விடா முயற்சி
தோற்காது
தொட தொட
வானமும்
வசப்படும்.



**ஐயந்திசிவக்குமார்**
திருச்சி.

## விருட்சம்

மண்ணில் மக்கிய
உரங்களுக்கு மத்தியில்,
மழைத்துளி மண்ணில்
விழுந்து, புல் கொஞ்சம்
பூச்சிகள் கொஞ்சம்
சுவைத்திடாமல்,
உறிஞ்சிய விதையில்
உறைகளைக் கிழித்து,
மண்கள் புடைத்து,
விடிவெள்ளி
பாக்குது,
ஆம் இங்கு
விரும்பிய
விதையே
விருட்சமும்
ஆகுது



**மை எழுத்து கனகராஜ்**
கோயம்புத்தூர்

## எதற்கு......

மதம் யானைக்கு
ஜாதி நாய்க்கு குணம்
மனிதனுக்கு பணம்
தேவைக்கு நியாயம் நீதிக்கு
ஆசை அழிவுக்கு
கொடுமை பசிக்கு
கோபம் கொலைக்கு
பாவம் மரணத்திற்கு
தேகம் அழகுக்கு
மோகம் உணர்ச்சிக்கு
மேகம் மழைக்கு
மழை தாகத்திற்கு
சோகம் நினைவுக்கு
வெற்றி முயற்சிக்கு
கவலை நட்புக்கு
சொந்தம் அன்புக்கு
உழைப்பு உயர்வுக்கு
உரிமை செயலுக்கு
உணவு உயிருக்கு
உள்ளம் பிறருக்கு
வேகம் காற்றிற்கு
லஞ்சம் வேலைக்கு
பஞ்சம் விவசாயிக்கு
தஞ்சம் முதியோர்க்கு
அமைதி மேன்மைக்கு
கவிதை கற்பனைக்கு
மண் மனிதனுக்கு
மனிதன் மண்ணிற்கு
வாழ்க்கை.,....வாழ்வதற்கு..

**கவிஞர் பெருமாள் பட்டி.. பூ. அடைக்கலாம்**
புதுக்கோட்டை

## தேவை

தாய்க்குப் பாசம் தேவை
தந்தைக்குப் பணம் தேவை
குருவுக்கு மரியாதை தேவை
கடவுளுக்கு பக்தி தேவை
குழந்தைக்கு அன்பு தேவை
குழலுக்கு ஓசை தேவை
குயிலுக்கு கூவல் தேவை
குமரிக்கு
மணவாழ்க்கை
தேவை
இளைஞனுக்கு
வேலை
தேவை!



**மீனாட்சி பாண்டியன்**



## மாலைமதி

உன் பார்வை சூரிய பார்வை
என்று ஊரெல்லாம் பறை
சாற்றுகிறார்கள்!
நான் உன் அருகில் வரும்
போது மட்டும் நீ
மாலைமதியாவதன் மர்மத்தை
இவர்களுக்கெல்லாம்
எப்பொழுது சொல்லலாம்?!
என்னைச்சந்திக்க வரும்
தினங்களில் நீ உன்
கண்களிலுள்ள
தோட்டாக்களை
வீட்டில் வைத்து விட்டு வரும்
காரணம் ஒன்றிற்காகவே
உனக்குக்கூடுதல்
முத்தங்களுக்கு
இதழொப்பமிடுகிறது
என் காதல் உதடுகள்!
நீ அணைக்கும் போது
ஒன்றாகவும் விலகும் போது
ஒன்றாகவும் மாறுகிறது
என்னைச்சுற்றியுள்ள தட்ப
வெப்ப நிலை!
நானிருக்க பயமேன்?
என்று சொல்கிறது என்
அன்பு அதரங்கள்!
நீயிருப்பதால் தான் அச்சமே
என்று
அலறுகிறது
உன் காதல்
கண்கள்!



**முத்து ஆனந்த்**
வேலூர்







# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: சூரியனின் ஓவியங்கள்
ஆசிரியர்: மருத்துவர் த.ரவிக்குமார்
வெளியீடு: புஸ்தகா
விலை : ₹150
தொடர்புக்கு:7418555884

பலவும் படித்து மகிழ்ந்தவையே இங்கே மேடைப் பேச்சுக்கு உதவும் வகையில் ஒரு தொகுப்பாக ஒரு சில இங்கே உங்கள் பார்வைக்கு; சூரியனின் ஓவியங்கள்:

ஒரு முறை மதன் கேள்வி-பதிலில் "போட்டோ என்பதற்கு ஒளி என்று பெயர்" ஆனால் தமிழில் புகைப்படம் என்கிறார்களே எது சரி, ஒளிப்படமா? புகைப்படமா? என்று கேட்டதற்கு, இதில் சந்தேகம் எதற்கு பளிச்சென்று இருந்தால் ஒளிப்படம், மங்கலாக இருந்தால் புகைப்படம் என பதில் கூறினார்.

குக்கர் ஒவ்வொருவரும் குக்கரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று இருக்கிறது. அது வெயிட் போட்டால் "பிரஷர்" வரும் என்பதுதான்.ஏடு இட்டோர் இயல் : ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். ஆங்கிலத்தில் எடிட்டோரியல் என்பதை ' தலையங்கம்' என குறிப்பிடுவது அது சரியா? எனக் கேட்டேன். அவரும் சரிதான் என்றார். அதற்கு ஈடான தமிழ் வார்த்தை கிடையாது என்றார். நான் சிரித்தவாறே கூறினேன் ஆங்கில எடிட்டோரியல் என்பதே தமிழ் வார்த்தை "ஏடு இட்டோர் இயல்" என்பதிலிருந்து சென்றது தான். அவரால் நம்ப இயலவில்லை. மீண்டும் மீண்டும் உண்மையா என கேட்டுக் கொண்டே இருந்தார்.

### திருக்குறள் – கள்

ஒரு பாட்டைத் தானே திருக்குறள் என்கிறோம் 1330 பாடல்கள் உள்ளனவே. எனவே நூலின் தலைப்பு திருக்குறள்கள் என்று தானே இருக்க வேண்டும் என எழுத்தாளர் சுஜாதாவிடம் ஒரு வாசகர் கேள்வி கேட்டார். அதற்கு சுஜாதா திருக்குறள்" கள்ளை" விரும்புவதில்லை என பதிலளித்தார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**




### எழுத்தாளனின் வழியின் வலி

எழுதும் எழுத்தெல்லாம் "வார்த்தைகளாகவும்" "வரிகளாகவும்"
"கவிதைகளாகவும்""ஹைக்கூ கவிதைகளாகவும்" தான்
தெரியும் மற்றவர்களுக்கு !

ஆனால் தன்னைத்தானே உணர்ந்தெழுதும் "எழுத்துக்கள்"
ஒவ்வொன்றும் தான் கடந்து வந்த போது தன் மீது விழுந்த
"கற்களென்று" ஓர் உன்னதமான "எழுத்தாளனுக்கு"
மட்டும்தான் தெரியும் !

குறிப்பாக "எழுதமுடியாத" "சிந்திக்க முடியாத" சிலர்
நீ உன் எழுத்தைக் கொண்டு என்னா வாங்கமுடியும் !

அதனால் கிடைத்த பலன் என்னவென்று !
கேள்விக்கணைகளை விட்டாலும் !
கடுஞ்சொற்களால் சுட்டாலும் !

எழுதுவதை நிறுத்தப்போவதுமில்லை ! அவமானங்களை
மறக்கப் போவதுமில்லை !

எழுதியவன் "அழிந்தாலும்" எழுதிய "எழுத்துக்களையும்"
எழுத்தாளனின் "பெயரையும்" எவராலும் ! "அழிக்கமுடியாது"

பலருக்கும் தெரியவில்லை "பல்கலைப் படிப்பு" படிக்காமலே
"எழுத்தாளன்" என்ற "பட்டம்" பெற்றுள்ளான் என்பது !

இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள் !
படித்து உணர்ந்து தெளிந்துகொள்ளுங்கள் !
எழுத்தாளன் என்னா "வாங்கியுள்ளான்" என்றும் !



அவனுடைய "எழுத்துக்களுக்கும்" "பெயருக்கும்"
அழிவென்பதே இல்லையென்றும் !

G.A.கோவிந்தராஜ்
(எ)சுரேஷ்குமார்
திருப்புவனம் புதூர்

### பணமே..பணமே..!

பணமே.  பணமே.. ஓ பணமே.!
நீ பையினில் இருந்தால் வரும் கணமே.!



கடையினில் பொருளை வாங்கணுமே..
அதற்கு கையினில் காசு இருக்கணுமே.!

கடவுளைப் பார்க்கவும் கொடுக்கணுமே..
அது கடைமடை வரையிலும் பாய்ந்திடுமே.!

ஆடை அணிகலன் வாங்கணுமே..
இங்கு அதற்கெல்லாம் பணமே இருக்கணுமே..

உழைப்பவன் கூலியாய் வந்த பணமே..
அதுவும் கால் வயிற்றையே நிரப்பணுமே.!

மாடி மனைகளும் வாங்கணுமே..
அந்த மண் குடிசைகளும் மாறணுமே..

ஏழைகள் இலவசமாய் படிக்கணுமே..
அந்த பள்ளியில் நுழையவே பண மிருக்கணுமே..

ஒவ்வொரு பணமாய் சேர்க்கணுமே..
இந்த உலகமே பணத்தின் பின் நடக்கும் தினமே..

பிணம் ஆனாலும் பணம் இருக்கணுமே.. அதை புதைக்கவும்
எரிக்கவும் பணம் வேணுமே..!



பணமே.. பணமே.. ஓ.. பணமே..!
பணத்துக்கு பின்னாலே ஓடும் உலகமே.?

பணம் இல்லையேல் அவன் பிணமே..
இது கிடைத்து விட்டால்.. அது சுப தினமே.!

வே.கல்யாண்குமார்.



### கல்கண்டு

காதலின் ஆதிக்கம்
இதயம் முழுவதும்
நிரம்பியிருந்தாலும்(கூட)
அதன் ஆட்சியை
முதல் முதலாகக்கைப்பற்றுவது
கண்கள் தான் என்பதற்கு
நம் இருவர் கண்கள் மட்டும்
விதிவிலக்காகி விட முடியுமா
என்ன?!
நீ சைவப் பெண்ணாக
இருப்பதில் ஒரே ஒரு சதவீதம்
கூட எந்த ஆட்சேபனையும்
இல்லை!
ஆனால் நம் கா த ல்
கொடி சிறப்பாகப் பறக்க
வேண்டுமெனில் அசைவம்
மிக மிக அவசியம்!
தேன் அமிர்தம் கல்கண்டு
இவையெல்லாம் இனிப்பென்று
பிறர் சொல்லலாம்!
உன் மு த் த ங் க ளி (னா) ல்
வாழும் நான் எப்படி அதைச்
சொல்ல இயலும்?!
தமிழ் படித்தாலும் பிடித்தாலும்
உன் ஆ ங் கி ல
மு த் த ங் க ளை நான்
வேண்டாமென்று சொன்னால்
ஒரு நல்ல கா த ல னா க
நான் திகழ்ந்திட முடியுமா?!

முத்து ஆனந்த் வேலூர்

நீ யாரோ தெரியாது..
உன் முகமறியேன்..
காற்றின் வழி செவி
மோதுகிற பிடித்த பாடலாய்..
நீ எனக்குப் பிரியமாகிறாய்.
உன் பெயர் கேட்க
புன்னகைத்துக்கொள்கிறேன்..
அவ்வப்போது உன் சிரிப்பில்
எனக்குள் முகிழ்க்கிறது
அதே ஆனந்தம்..
நாம் சந்திப்போமோ
இல்லையோ.. எனக்கென்று
நீ இருக்கிறாயெனும்



நினைப்பில்
என் திமிருக்கு
சூட்டிக்
கொள்கிறேன்
நிரந்தரமாய்
ஒரு மகுடம் !

ரிஷபன்

### கண்வெட்டே காதலா ?

கண்ணில் பட்டதும்
சாலையில் மயங்கியவர்
பண்பட்ட வாழ்வில் உழன்றே
வாழ்வர் !!

கண்டதும் ஏற்படுவது
காமத்தின் ஆரம்பம்
கண்களில் புகுந்து
கருத்தினில் உறைந்து

குணத்தினை அறிந்து
மனத்தினைத்தெரிந்து
பணத்தினை அகற்றி
உள்ளத்தில் புதைந்து

நெஞ்சத்தில் நிறைந்து
நேசத்தைப்பரப்பி
நிகழும் மாற்றமே
நிலைத்திடும் அன்பு !!

மஞ்சத்தை எண்ணி
முயன்றிடும் எல்லாம்
பஞ்சமாய் பாதகச்
செயலென்று உணர் !!



கண்வெட்டே
காதல்
என்றின்று
ஆனதே
பண்பட்ட
மரபும் பாழாய்ப்
போனதே !!

சண்முக சுப்பிரமணியன்
திருநெல்வேலி

### ஓட்டு !

முன்பெல்லாம் வாக்காளர்
பட்டியலில் பெயர் சேர்க்க
அவ்வளவாக யாரும் நாட்டம்
கொண்டதில்லை !

இப்போது 18 வயது
நிரம்பியவரும், 98 வயது
முதியவரும் வாக்காளர்
பட்டியலில் பெயர் சரிபார்க்க
ஆவலுடன் செல்கின்றனர்....



பெயர்
இல்லேனா
ஓட்டுக்கு
பணம் தர
மாட்டாங்கப்பு !

எம்.பி.தினேஷ்.
கோவை

### மலர்கள் வாசம்தரும் ஈசல்கள்.

மலர்மாலை
வாழைநாருக்குள்
கட்(டு);(ட)ப்பட்ட
கூட்டுக்குடும்பம்.

ஒற்றுமையின்
பிரதிபிம்பம்.

வாழைப்பழம்
தோலுரிப்பவருக்கு
தன்னைதரும் தியாகி.

அழகு இது கண்களுக்கு
மட்டும்தான். அழகும் ஒருநாள்
அழுகும் என்பதை
உணர்ந்தால் மாயை விலகும்.

தலைகவசம் வித்து
காலத்தில் உயிர் காப்பான்.

பாதுகை ரப்பர்
பாதத்தின்பாதுகாவலன்.

சூழ்கொண்ட வான்மேகம்



கதிர்கள்
உதிர்த்து
மழைத்
துளியாய்!...

கவிஞர்
பொன்.பனகல்
பொன்னையா.

### ஒட்டிய வயிற்றினில்....!

நேரிசை வெண்பா!

வயிற்றுக்(கு) உணவில்லை
வாடுகிறோம் ஆனால்

நயன்மையாய் ஊருக்கே
நன்கே... அயற்சியின்றி

வேலையைச்செய்கின்றோம்
வீறுடன் எந்நாளும்

கோலமுடன் தானிங்கு
கொள்!

கடமையைக் கண்ணியமாய்க்
கட்டுப்பாட்டோடே

அடிமையாய்ச்செய்கின்றோம்
அன்பாய்த்..துடிப்பாக

எந்த எதிர்பார்ப்பும்
எங்களுக்கோ இல்லையே

விந்தை உழைப்பன்றோவீறு!

உழைக்கத்தயங்கிடோம்
ஊருக்(கு)உழைத்தும்

தழைத்திடோம் தண்மையே
யில்லை.. அழைத்தால்

வருவோம் அயர்வின்றி
வண்ண உழைப்பைத்
தருவோம்
உழைப்பாளி தாம்!

வாடும் பயிரையே
வள்ளலார் பார்த்தாரே

தேடி அணையாத
தேரடுப்பை.. நாடினார்



ஏழை
எளியோர்க்கே
ஏற்ற
உணவளித்தார்

வாழிய
வள்ளலார் நீடு!

முனைவர்
இராம.வேதநாயகம்.



உலுக்கி விட்டுப்
போகிறாய்.. கொட்டித்
தீர்த்தது முத்தங்கள் !

குவிதலில் மலர்கிறது
முத்தப்பூ.

குனிந்து மணல்வெளியை
முத்தமிட்டேன்..
நதி ஓடத் துவங்கியது !

ரிஷபன்

பழையன கழிதலும்,
புதியன புகுதலும்
வழி வழி வந்த
வழக்க மன்றோ!

முதிரும் பருவம்,
உதிரும் சருகாம்
அசையென நினைவுகள்
அலையென ஆயிரம்.

இனிதென நினைத்தவை
கரைவதை அறிவோம்;
இனி அவை வருமோ?
ஏங்குதல் இயல்பே.

மனநிலை யாவும்
மாறிட வேண்டும்;
மாற்றம் நாடிடும்
தலைமுறைகள் கூட.

புதுமை பல பல
தேடுதல் இயற்கை;
செயற்கை அறிவின்
ஜனனம் கண்டோம்.

இனிதான் வருமே
அறிவியல் ஆட்டம்.
தோற்றோம் என நாம்
ஒரு கணம் நினையோம்.

ஏற்போம் எதையும்
இனிதென அமைய



காலம்
ஒட்டத்தில்
இணைந்திடு
வோமே

சுந்தர
மணிவண்ணன்



### நிழலும் நீயும்...

நிழல் போல
பின்தொடர்கிறது... உன்
நினைவு...

என்றாவது ஒரு நாளில்
வந்து சேர மாட்டாயா?
ஏங்குகிறது...கனவு..

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

### காரியமே வீரியம்

இரண்டு சிறகுகள்
விழுந்தால்தான் நான்கு
சிறகுகள் முளைத்து
சிறகடித்து பறக்கிறது
பறவை,

இரண்டு இலைகள்
பழுத்தால்தான் நான்கு
இலைகள் துளிர்விட்டு
வளர்ந்து நிழல்தருகிறது
மரம்,

இரண்டுபேர் இறந்தால்தான்
நான்கு பேர் பிறந்து
சுழற்சியடைகிறது
வாழ்க்கை

அதிக நேரம் மகிழ்ச்சியால்
திளைத்தாலும் ஏதோ ஒரு
சோகத்திற்காக ஏன் நண்பா
துவண்டுப்போகிறாய்?!



நாளைய
வெற்றி
நமக்கானது
கவலையை
கிடப்பில்
போட்டு
காரியத்தில்
இறங்கு தோழனே,,,

நாகை ஆசைத்தம்பி
கோவை

### உறைவிப்பான்

மாவரைக்கும் இயந்திரம்
நன்றாக இயங்கியும் கடை
மாவில் இட்லி தோசை

ஆடிக்கொரு முறை
அமாவாசைக் கொரு
தடவைதான் எனில்
நிச்சயம் தவறில்லை

சமைக்க முடிந்தாலும்
ஓட்டலைத் தேடிச் சென்று
வக்கணையாய் உண்பது
அல்லது தமது வீட்டிற்கே
வகை வகையாய் தருவிப்பது

உறைவிப்பானில் வைத்த
சில பல நாட்களான
ஆடு கோழி மீனை



சுவைத்து
புதுமை
நோயை
வரவேற்பது
தேவையா?

பி. பழனி,
சென்னை.

ஞாபகங்களின்
மயிலிறகு அடுக்குகளின்
இடுக்குகளில்
வெப்பம் கொடுக்கும்
நினைவலைகள்

கூடவே உன் தீஞ்சுவை
வார்த்தைகளின்
குளிர்ப் போர்வை முரணாய்

முழுமை நிறைந்து
வழியும் அன்பை
அடைகாத்துக்கொண்டே
இருக்கும் மனசு

நம் நினைவுகளை
சமன்படுத்த உதவும்
இவற்றால் உயிர்த்துக்
கொண்டேயிருத்தல்
சாத்தியமாகிறது
தவிக்கும்
காலங்களி லெல்லாம்



என்பதைத்
தவிற
வேறென்ன
இயம்ப!

கீதா
கண்ணன்
ஸ்ரீரங்கம்

### வட்டியுடன் வாழ்வு கணக்கு.!

கட்டிலிலே.. பெற்றவர்கள் கலந்தாடியதாலே..
தொட்டிலிலே பிள்ளைகளாய் நாமாடினோமே..!
பட்டிவிட்டு வெளிவந்து தெருவினிலே.. மண்ணிலே
மழலையாய் ஆடினோமே..! கட்டிளம் காளையராய்..
கன்னியராய் காதலிலே கண்ணசைத்து ஆடினோமே..!
பெட்டியிலே.. பணம் பணம்..என்று பின்னர் ஊரெல்லாம்
ஊர்ந்து போய் ஆடினோமே..
நெட்டி நம்மை தள்ளிவிடும் காலம்.. வயது.. நினையாமல்
ஆடும் வரை ஆடினோமே..! கட்டி வைத்த பாசக்கயிற்றை
அவன் இழுக்க.. கண்மூடி பெட்டியில் கண் மூடினோமே..!
எட்டி நட.. எடும் எனறே.. ஊரார் அரற்ற.. காலில்லா கட்டிலிலே
நால்வர் தூக்க.. கல்லறைக்கு ஒருநாளில் ஓடினோமே!
அட்டியில்லா மனித வாழ்வு இதுதான் என்றே
தத்துவங்கள் பேசி.. பின் வாய் மூடினோமே.!

வே.கல்யாண்குமார்.



### ஆளும் வளரணும் அறிவும் வளரணும்!

நிலைமண்டில ஆசிரியப்பா!

மனிதனாய் வாழ
நல்ல பண்புகள்
புனிதமாய்ப் பூக்க
வேண்டும்; என்றும்

உடலும் வளர்ந்து உன்னத
அறிவும் விடாமல் வளர
வேண்டும் உணர்க!
ஒழுக்க மென்ற உணர்வு

காண பழக்க வழக்கம்
பாங்காய் வேண்டும்!

காலம் தந்திடும்
கனிவுப் பயிற்சி
கோல மோடு
கொள்ள வேண்டும்!

ஈன்றாள் இனிதாய்
உள்ளம் நிறைய ஆன்ற
அறிவை அழகாய்ப் பெறுக!

பெற்றோர் மகிழ்ச்சி
பீடுறக் காண உற்ற கல்வியை
உண்மையாய்ப் பெறுக!

வளர்ச்சிப் பாதையே
வளமாம் பாதை
களிப்பா பெண்ணிக்
கல்வி பெறுகவே!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



### சங்கை மிகு புனிதரமலானே வருக..!

ஆண்டுக்கு ஒருமுறை
அழகாய் மலரும்...
சங்கை மிகு
புனித ரமலான் மாதமிது!

பசித்திருந்து...விழித்திருந்து...
தனித்திருந்து
முப்பது நாட்கள்
நோன்பிருக்கும் மாதமிது..!

அகந்தையை களைந்து...
ஆசைகளை துறந்து
பொய், புறம், கோபத்தை
விட்டொழிக்கும்மாதமிது!!

ஐம்பெரும் கடமைகளில்
நான்கு கட்டளைகளை
முழுமையாக கடைபிடிக்கும்
மாதமிது!!

மனிதகுல
முழுமைக்கும்
லைலத்கதிர் இரவில்
அருள் மறையைத்தந்த
அற்புத மாதமிது...

ஆயிரம் மாதங்களை விட
சிறந்த மாதமிது!

யாம் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம் என்ற
வாக்கின் படி... ஏழை
எளியோர்க்கும் வழிய சென்று
(ஜக்காத்தை) வாரி வழங்கும்
மாதமிது!

சகோதரத்துவம்
சகிப்புத் தன்மை...
மருத்துவம்... மனித
எனினும், பின்னர் அந்த பதிவு நீக்கப்பட்டது. அதேநேரத்தில், தொடர் விசாரணைக்காக மூன்று கப்பல்களும் மும்பைக்கு கொண்டு செல்லப்பட்டதாக ஆதாரங்கள் உறுதிப்படுத்தி உள்ளன. இதனிடையே, இந்திய கடலோர காவல்படை தனது ரோந்துப் பணிகளைத் மேலும் தீவிரப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைத் தொடர்ந்து பறிமுதல் மற்றும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த அதன் பல்வேறு கப்பல்களுக்கு அமெரிக்கா தடை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### பிக் பாஷ் கிரிக்கெட் லீக் ஆட்டத்தை சென்னையில் நடத்த திட்டம்

**சென்னை, பிப்.19:**

பிக் பாஷ் டி20 கிரிக்கெட் லீக் போட்டியின் ஒரு ஆட்டத்தை சென்னையில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக கிரிக்கெட் ஆஸ்திரேலியா (சிஏ) அமைப்புடன், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் (டிஎன்சிஏ) ஆலோசனை நடத்தியுள்ளது.

ஐபிஎல் போட்டியைப் போல பிக் பாஷ் லீக் (பிபிஎல்) போட்டி, ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்டு வரும் பிரபலமான டி20 கிரிக்கெட் தொடராகும். இந்நிலையில் பிபிஎல் போட்டியை மேலும் பிரபலப்படுத்தும் விதமாக அடுத்த சீசனின் ஒரு ஆட்டத்தை மட்டும் சென்னையில் நடத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. இதை டிஎன்சிஏ மூத்த நிர்வாகி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் கூறும்போது, "கிரிக்கெட் ஆஸ்திரேலியா அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் பில் ரிக்பி, மார்கட் ஹார்லி ஆகியோர் ஒரு ஆட்டத்தை சென்னையில் நடத்துவது தொடர்பாக டிஎன்சிஏ நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர். சென்னையில் போட்டியை நடத்தும் திட்டம் இன்னும் ஆரம்பக் கட்ட நிலையிலேயே உள்ளது.

ஆஸ்திரேலியாவை விட்டு ஒரு போட்டியை வெளிநாட்டில் நடத்தி பிரபலப்படுத்துவதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை எம்.ஏ.சிதம்பரம் மைதானம் குறித்து நல்ல விஷயங்களை கேட்டறிந்து இந்த முடிவை சிஏ எடுத்துள்ளது. இந்த விஷயத்தில் டிஎன்சிஏ தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது. பிசிசிஐ உத்தரவு வந்த பின்னரே நாங்கள் முடிவெடுக்க முடியும்" என்றார்.

### அயர்லாந்துக்கு எதிரான ஆட்டம் மழையால் ரத்து: சூப்பர் 8 சுற்றில் கால்பதித்தது ஜிம்பாப்வே

**பல்லேகலே, பிப்.19:**

ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் நேற்று 'பி' பிரிவில் இலங்கையின் கண்டியில் உள்ள பல்லேகலே மைதானத்தில் ஜிம்பாப்வே - அயர்லாந்து அணிகள் மோதுவதாக இருந்தது.

ஆனால் இந்த ஆட்டம் மழை காரணமாக ஒருபந்து கூட வீசப்படாமல் ரத்து செய்யப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இதன் மூலம் ஜிம்பாப்வே அணி 5 புள்ளிகளுடன் தனது பிரிவில் 2-வது இடம் பிடித்து சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியது. அந்த அணி 2 வெற்றிகளை பதிவு செய்திருந்தது.

இதே பிரிவில் முன்னாள் சாம்பியனான இலங்கை அணி 6 புள்ளிகளுடன் ஏற்கெனவே சூப்பர் 8 சுற்றில் கால்பதித்து இருந்தது.

ஜிம்பாப்வே - அயர்லாந்து அணிகள் இடையிலான ஆட்டம் ரத்து ஆனதால் இதே பிரிவில் இடம் பெற்றிருந்த முன்னாள் சாம்பியனான ஆஸ்திரேலிய அணி சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. இதனால் அந்த அணி லீக் சுற்றுடன் வெளியேறுகிறது.

மிட்செல் மார்ஷ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி 3 ஆட்டங்களில் 2 தோல்வி, ஒரு வெற்றியை பதிவு செய்திருந்தது. லீக் சுற்றை 3 புள்ளிகளுடன் நிறைவு செய்த அயர்லாந்து அணி தொடரில் இருந்து வெளியேறியது.

# முதுநிலை நீட் கட்-ஆஃப் குறைப்பால் கலந்தாய்வுக்குக் கூடுதலாக 95,913 பேர் தகுதி: உச்சநீதிமன்றத்தில் தகவல்

**புதுடெல்லி, பிப்.19:**

முதுநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் கட்-ஆஃப் மதிப்பெண் விகிதத்தை (பாசென்டைல்) குறைத்ததால், கூடுதலாக 95,913 தேர்வர்கள் முதுநிலை நீட் கலந்தாய்வில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர் என்று உச்சநீதிமன்றத்தில் தேசிய மருத்துவத் தேர்வுகள் வாரியம் (என்பிஇஎம்எஸ்) தெரிவித்துள்ளது.



2025-26-ஆம் ஆண்டுக்கான முதுநிலை மருத்துவப் படிப்பு சேர்க்கைக்கு நீட் (தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு) கட்-ஆஃப் மதிப்பெண் விகிதம் குறைக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை, அண்மையில் உச்சநீதிமன்றம் விசாரித்தது.

அப்போது கட்-ஆஃப் மதிப்பெண் விகிதம் குறைக்கப்பட்டதற்கான காரணம் குறித்து விளக்கம் அளிக்குமாறு மத்திய அரசு மற்றும் என்பிஇஎம்எஸ்ஸுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் என்பிஇஎம்எஸ் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில், 'முதுநிலை நீட் கட்-ஆஃப் மதிப்பெண் விகிதத்தை குறைக்கும் முடிவு மத்திய சுகாதார அமைச்சகத்தின் சுகாதார சேவைகள் இயக்குநரகம், தேசிய மருத்துவ ஆணையத்தின் அதிகாரத்துக்குட்பட்டதாகும். அதில் என்பிஇஎம்எஸ்ஸுக்கு எந்தப் பங்கும் இல்லை.

கட்-ஆஃப் மதிப்பெண் விகிதத்தை குறைத்ததால், கூடுதலாக 95,913 தேர்வர்கள் முதுநிலை நீட் கலந்தாய்வில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர். எனவே அவர்களின் தரப்பை கேட்காமல் உச்சநீதிமன்றம் எடுக்கும் எந்தவொரு முடிவும், அந்தத் தேர்வர்களைப் பாதிக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டம் ஒழுங்கு பிரச்னை: ஒரு மாதத்திற்கு வளாகத்தில் போராட்டங்களுக்கு தடை விதித்தது டில்லி பல்கலை

**புதுடெல்லி, பிப்.19:**

டில்லி பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரி அலுவலகம் பிப்ரவரி 17ஆம் தேதியிட்ட உத்தரவில் தெரிவிக்கையில், கட்டுப்பாடற்ற பொதுக் கூட்டங்கள் அதிகரித்து சட்டம்-ஒழுங்கைப் பாதிக்கக்கூடும் என்ற தகவல்களைத் தொடர்ந்து இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

சிவில் லைன்ஸ் காவல் உதவி ஆணையரின் முன் உத்தரவு இருப்பதால், பொதுக் கூட்டங்கள், தீப்பந்தங்கள் அல்லது அதுபோன்ற பொருள்களை எடுத்துச் செல்வது, கோஷங்கள் எழுப்புதல் மற்றும் பொது அமைதி அல்லது போக்குவரத்து ஓட்டத்தை பாதிக்கக்கூடிய பேச்சுக்கள் ஆகியவை தடைசெய்யப்படுகிறது.

கடந்த காலங்களில், ஏற்பாட்டாளர்கள் பெரும்பாலும் இதுபோன்ற போராட்டங்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டனர். இது போராட்டத்தை அதிகரித்து பரவச்செய்தது. இதன் விளைவாக பல்கலைக்கழக வளாகத்திற்குள் சட்டம் ஒழுங்கு மோசமடைந்தது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடி, கோஷங்கள் எழுப்புவதும், உரை நிகழ்த்துவதும், மஷால், பீக்கன்கள், தீப்பந்தங்கள் போன்ற ஆபத்தான பொருட்களை எடுத்துச் செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தடை உடனடியாக அமலுக்கு வருகிறது. முன்கூட்டியே திரும்பப் பெறப்படாவிட்டால் ஒரு மாதத்திற்கு அமலில் இருக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய அரசு நிறுவனம் கண்டுபிடித்த புரோட்டீன் நிறைந்த 'டிசைனர் அரிசி' - தனியார் மூலம் விரைவில் சந்தையில் அறிமுகம்

**புதுடெல்லி, பிப்.19:**

மத்திய அரசின் அறிவியல், தொழில் துறை ஆராய்ச்சி கவுன்சில் - தேசிய பல்துறை அறிவியல், தொழில்நுட்ப நிறுவனம் (சிஎஸ்ஐஆர்-என்ஐஐஎஸ்டி) கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் செயல்படுகிறது.

சிஎஸ்ஐஆர்-என்ஐஐஎஸ்டி நிறுவனம் சார்பில் அதிக புரோட்டீன், இரும்புச் சத்து, போலிக்அமிலம், வைட்டமின் பி12 உள்ளிட்ட ஊட்டச் சத்துகள் அடங்கிய 'டிசைனர் அரிசி' ரகம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதில், சாதாரண அரிசியைவிட 3 மடங்கு அதிக புரதச் சத்து உள்ளது. இதன்மூலம் பொதுமக்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க முடியும். மேலும் டிசைனர் அரிசியில் கிளைசெமிக் இன்டெக்ஸ் (ஜிஐ) அளவு மிக குறைவாக உள்ளது.

அதிக ஜிஐ அளவு உள்ள அரிசி ரகங்களால் ரத்தத்தில் குளுக்கோஸ் அளவு விரைவாக உயரும். புதிய அரிசியில் ஜிஐ அளவு குறைவாக இருப்பதால் சர்க்கரை நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

இதுதொடர்பாக சிஎஸ்ஐஆர்-என்ஐஐஎஸ்டி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "டிசைனர் அரிசி ரகம் தொடர்பான தொழில்நுட்பம், டாடா கன்சியூமர் புராடக்ட்ஸ், திருப்பூரை சேர்ந்த எஸ்எஸ் சோல் புட்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த ஒப்பந்த பரிமாற்றம் தொடர்பான நிகழ்ச்சி டெல்லியில் பிப். 18-ல் நடைபெறுகிறது" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு காஷ்மீரில் மூடப்பட்ட சுற்றுலாத் தலங்கள் திறப்பு: துணை ஆளுநர் உத்தரவு

**ஸ்ரீநகர், பிப்.19:**

ஜம்மு காஷ்மீர் பஹல்காமில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பிறகு மூடப்பட்ட சுற்றுலாத் தலங்களில் பெரும்பாலானவற்றை மீண்டும் திறக்க துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா உத்தரவிட்டுள்ளார்.



ஜம்மு காஷ்மீர் பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். அதில் 26 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 25 பேர் சுற்றுலாப் பயணிகள். இதையடுத்து, பாதுகாப்புக் கருதி 48 சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டன.

இந்நிலையில், துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா செய்தியாளர்களிடம் கூறியதாவது: பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு கடந்த 10 மாதங்களாக காஷ்மீர் சுற்றுலா பாதிக்கப்பட்டது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு சுற்றுலாத் தலங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து உயரதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தினேன். அதன் அடிப்படையில் தற்போது 14 சுற்றுலாத் தலங்களை உடனடியாக திறக்க உத்தரவிட்டுள்ளேன். அந்தப் பகுதிகளில் உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அச்சமின்றி சென்று வரலாம். அதற்கான முழு பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். மொத்தமுள்ள 48 சுற்றலாத் தலங்களில் இதுவரை 42 சுற்றுலாத் தலங்கள் திறக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 6 சுற்றுலாத் தலங்கள் விரைவில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையில், கடந்த ஜனவரி மாதம் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் காஷ்மீர் வந்து சென்றுள்ளனர். தற்போது ஜம்மு காஷ்மீரில் பனிப்பொழிவு அதிகரித்துள்ளதால், சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் மூலம் காஷ்மீரில் சுற்றுலா தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## க்ரைம் கார்னர்

### 2வது திருமணம்...ரூ.25 லட்சம்... ஆசை வார்த்தையால் ஏமாந்த பெண்

**நீலகிரி, பிப்.19:**

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில், 2-வது திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி 45 வயது பெண்ணிடம் ரூ.25 லட்சம் மோசடி செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே திருமணமாகி இரு மகள்கள் உள்ள அந்த பெண்ணை, இங்கிலாந்தில் வசிப்பதாக கூறிய ஒருவர் 'பர்மடோ எரிக்' என்ற பெயரில் தொடர்புகொண்டுள்ளார். சமூக வலைதளங்கள் மூலம் நெருக்கம் ஏற்பட, திருமணம் செய்வதாக நம்பிக்கை அளித்துள்ளார்.

பின்னர் நேரில் பார்க்க இங்கிலாந்திலிருந்து வந்துள்ளதாகவும், அதிக அளவில் தங்க கட்டிகளை கொண்டு வந்ததால் டெல்லி விமான நிலையத்தில் சிக்கியுள்ளதாகவும் கூறி, பல்வேறு காரணங்களை சொல்லி பல தவணைகளில் அந்த பெண்ணிடமிருந்து ரூ.25 லட்சம் பணத்தை பெற்றுள்ளார். சந்தேகமடைந்த அந்த பெண் கோத்தகிரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். விசாரணையில், குற்றவாளி ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி போலி ஆவணங்கள் மற்றும் தகவல்கள் மூலம் ஏமாற்றியிருப்பது தெரியவந்தது.

### வேறொருவரின் நிலத்தைக் காட்டி ரூ.15 லட்சம் மோசடி செய்த நிலத்தரகர் கைது

**சென்னை, பிப்.19:**

சென்னை, சாலிகிராமம், பொன்னியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பாலச்சந்தர் (45). இவரது நண்பர் மூலம், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அருகே உள்ள எலப்பாக்கத்தைச் சேர்ந்த பாஸ்கரன் (51) என்பவர் கடந்தாண்டு அறிமுகமானார். நிலத்தரகரான பாஸ்கரன், பாலச்சந்தரிடம் தனக்கு எலப்பாக்கத்தில் 2 வீட்டு மனைகள் இருப்பதாகவும், அதை விற்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதை நம்பிய பாலச்சந்தர், அந்த வீட்டு மனைகளை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, இருவரும் பேசி, அந்த வீட்டுமனைகளுக்கு ரூ.15 லட்சம் விலை நிர்ணயம் செய்துள்ளனர். இழுத்தடிப்பு இதையடுத்து, பாலச்சந்தர், பாஸ்கரனிடம் ரூ.15 லட்சத்தை கொடுத்தார். ஆனால், பாஸ்கரன், அந்த வீட்டு மனைகளை பத்திரப் பதிவு செய்து கொடுக்காமல் இழுத்தடித்து வந்துள்ளார். இதனால், சந்தேகமடைந்த பாலச்சந்தர், அந்த வீட்டுமனைகளின் ஆவணங்களை சரி பார்த்தார். அப்போது, அந்த வீட்டு மனைகள் பாஸ்கரனுக்கு சொந்தமானது இல்லை என்பதும், அடுத்தவருக்கு சொந்தமான நிலத்தை காட்டி தன்னிடம் ரூ.15 லட்சத்தை பாஸ்கரன் மோசடி செய்திருப்பதையும் அறிந்து அதிர்ச்சியடைந்தார். இதுதொடர்பாக, விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் பாலச்சந்தர் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து பாஸ்கரனை கைது செய்தனர்.

### மின்சார ரயிலில் டிக்கெட் எடுக்காமல் தகராறு: போதை இளைஞரை ஆர்பிஎஃப் காவலர் தாக்கிய வீடியோ வைரல்

**சென்னை, பிப்.19:**

சென்னை சென்ட்ரலில் இருந்து கும்மிடிப்பூண்டிக்கு கடந்த 11-ம் தேதி ஒரு மின்சார ரயில் புறப்பட்டது. இந்த ரயிலின் முதல் வகுப்பு பெட்டியில் மது போதையில் ஓர் இளைஞர் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது. அவரை டிக்கெட் பரிசோதகர் சோதித்த போது, அந்த நபர் டிக்கெட் இன்றி பயணிப்பது தெரியவந்தது. இதையடுத்து, அந்த நபரை டிக்கெட் பரிசோதகர் கீழே இறக்கி, அபராதம் விதிக்க முயன்றார். அதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர், டிக்கெட் பரிசோதகரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதுகுறித்து ஆர்பிஎஃப் போலீஸாரிடம் டிக்கெட் பரிசோதகர் தெரிவித்தார். அங்கு வந்த ஆர்பிஎஃப் காவலர் ஒருவர், இளைஞரை பிடிக்க முயன்றபோது இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து, கொருக்குப்பேட்டை ரயில்வே போலீஸாரிடம் கேட்டபோது, மதுபோதையில் பயணித்த இளைஞர், கொருக்குப்பேட்டைச் சேர்ந்த தர்மன் (22) என்பதும், இவர் மீது தண்டையார்பேட்டை ஆர்பிஎஃப் போலீஸார் வழக்குப் பதிந்து, அபராதம் விதித்து அனுப்பியதும் தெரியவந்தது.

## வணிகச் செய்திகள்

### தொடர்ந்து சரியும் தங்கம், வெள்ளி விலை!

**சென்னை, பிப்.19:**

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தச் சூழலில், கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கிய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்நிலையில், (பிப்.18) காலை சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.90 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,230-க்கு விற்பனை ஆகிறது. பவுனுக்கு ரூ.720 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,13,840-க்கு விற்பனை ஆகிறது.

அதே போல, 18 காரட் தங்கம் விலையும் கிராமுக்கு ரூ.70 குறைந்து ஒரு கிராம் ரூ.12,180-க்கும் பவுனுக்கு ரூ.560 குறைந்து ஒரு பவுன் ரூ.97,440-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.260-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.5,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,60,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

# ஏஐ போலி மருந்து சீட்டால் ஆபத்து: பிரதமருக்கு மருந்தாளுநர்கள் எச்சரிக்கை கடிதம்

**புதுடெல்லி, பிப்.19:**



"நாட்டில் தடை செய்யப்பட்ட மருந்துகளை விற்பனை செய்வதற்காக, ஏஐ மூலம் போலியாக மருத்துவர்களின் பரிந்துரை கடிதங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதை தடுத்து நிறுத்த வேண்டும்" என்று பிரதமர் மோடிக்கு அகில இந்திய வேதியிலாளர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் சங்கம் (ஏஐஓசிடி) எச்சரிக்கை கடிதம் அனுப்பி உள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் மோடிக்கு ஏஐஓசிடி அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: நாட்டில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் மூலம் போலியாக மருத்துவர்களின் மருந்து பரிந்துரை சீட்டுகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றில் போலி மருத்துவமனைகளின் பெயர்கள், போலி நோயாளிகளின் தகவல்கள் அடங்கியுள்ளன. அவற்றின் மூலம் தடை செய்யப்பட்ட மருந்துகள் ஆன்லைனில் விற்பனை செய்வது அதிகரித்து வருகிறது. இந்தப் போக்கு பொதுமக்களின் உடல்நலத்துக்கு மிக அச்சுறுத்தலாக உள்ளது. குறிப்பாக ஏஐ. யால் உருவாக்கப்பட்ட மருந்து சீட்டுகளின் மூலம் ஆன்லைனில் அதிகமாக நோய் எதிர்ப்பு மருந்துகள் (ஆன்டிபயாட்டிக்), மனநல சிகிச்சைக்கு வழங்கப்படும் மருந்துகள், ஓபியம் கலந்த மருந்துகள் மற்றும் அட்டவணை எச் மற்றும் அட்டவணை எக்ஸ் ஆகியவற்றில் கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகள் விற்கப்படுகின்றன. இது பொதுமக்களின் உடல்நலத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி நேரடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏஐ மூலம் உருவாக்கப்பட்ட மருந்து சீட்டுகளை சில ஆன்லைன் இணையதளங்கள் ஏற்றுக் கொண்டு மருந்துகளை விநியோகிக்கின்றன. இது சட்டவிரோதமாகும். இதுபோன்ற செயல்கள் இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையை சீர்குலைப்பதாகும். மேலும், இ பார்மசி என்ற பெயரில் சட்ட விரோதமாக செயல்படும் இணையதளங்கள், ஜிஎஸ்ஆர் 817(இ) மற்றும் ஜிஎஸ்ஆர் 220 (இ) ஆகிய அரசு அறிவிக்கையின் அடிப்படையில் இயங்குவதாக கூறிக் கொள்கின்றன. இது சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்திக் கொள்வதாகும்.

2 அறிவிக்கைகளை அரசு வெளியிட்டுள்ளது. அவற்றை ஆன்லைன் விற்பனைக்காகத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். மருந்து சீட்டுகளை முறைப்படி ஆராயாமல், பொறுப்பில்லாமல் இது போல் விற்பனை நடக்கிறது. எனவே, ஏஐ மூலம் போலி மருந்து சீட்டுகள் உருவாக்கப்படுவதை உடனடியாக தடுக்க வேண்டும். சட்டவிரோதமாக ஆன்லைனில் மருந்துகள் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் ஏஐஓசிடி கூறியுள்ளது.

இதுகுறித்து ஏஐஓசிடி பொதுச் செயலாளர் ராஜீன் சிங் கூறும் போது, "மருந்து சீட்டுகளை நேரடியாக ஆய்வு செய்ய முடியாத நிலையில், ஆன்லைனில் வழங்கப்படும் மருந்து சீட்டுகள் உண்மையா அல்லது போலியா என்பதை வேறுபடுத்தி பார்ப்பது கடினம். அதேநேரத்தில் நேரடியாக மருத்துவர்கள் வழங்கும் மருந்து சீட்டுகளில் சந்தேகம் ஏற்பட்டால் குறிப்பிட்ட மருந்துகளை மருந்தாளுநர்கள் வழங்குவதில்லை" என்றார்.

# சத்தீஷ்கார்: 22 நக்சலைட்டுகள் போலீசில் சரண்

**ராய்ப்பூர், பிப்.19:**

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம், தெலுங்கானா, ஆந்திரா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது. இந்த நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு தனிப்படை போலீசாருடன் இணைந்து மத்திய ரிசர்வ் போலீசாரும் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, அடுத்த மாதம் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது. இதையடுத்து, மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டோ, சரண் அடைந்தோ வருகின்றனர்.

இந்நிலையில், சத்திஷ்கார் மாநிலம் சுக்மா மாவட்டத்தை சேர்ந்த 22 நக்சலைட்டுகள் இன்று ஆயுதங்களை கைவிட்டு போலீசில் சரணடைந்தனர். சரணடைந்த நக்சலைட்டுகள் மறுவாழ்விற்காக தலா ரூ. 50 ஆயிரம் வழங்கப்பட்டும் என்றும் மேலும், மறுவாழ்விற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மிகப்பெரிய ஏஐ தரவு மையம் அமைக்கிறது டிசிஎஸ்

**மும்பை, பிப்.19:**

இந்தியாவில் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தரவு மையத்தை அமைக்க டிசிஎஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. டெல்லியில் நடைபெற்ற ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் இதுகுறித்த அறிவிப்பை டிசிஎஸ் வெளியிட்டது. வணிக நிறுவனங்கள், அரசு அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏஐ தொழில்நுட்பத்துக்கு பெருமளவில் மாறி வருவதால் வலுவான தரவு உள்கட்டமைப்பு இப்போது மிகவும் அவசியமானதாக மாறி உள்ளது. தற்போது இந்தியாவின் தரவு மையத் திறன் 1.5 ஜிகா வாட்டாக உள்ளது. இது வரும் 2030-க்குள் 10 ஜிகாவாட்டுக்கும் அதிகமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளில் 90 சதவீதம் பேர் ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்கள்- மத்திய அரசு

**புதுடெல்லி, பிப்.19:**

கேரள எம்.பி. ஜான் பிரிட்டஸ், நாட்டில் அகில இந்திய பணிகளுக்காக கடந்த 5 ஆண்டுகளில் நடந்த நியமனங்களில் இடஒதுக்கீடு வாரியான விவரங்களையும், காலிப்பணியிடங்கள் குறித்தும் மாநிலங்களவையில் கேட்ட கேள்விக்கு மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியத் துறை இணை மந்திரி ஜிதேந்திர சிங் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்திருந்தார்.

அதில், 1-1-2025 நிலவரப்படி நாட்டில் 6,877 ஐ.ஏ.எஸ். பணியிடங்களும், 5,099 ஐ.பி.எஸ். பணியிடங்களும், 3,193 ஐ.எப்.எஸ். பணியிடங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 1,300 ஐ.ஏ.எஸ். பணியிடங்களும், 505 ஐ.பி.எஸ். பணியிடங்களும், 1,029 ஐ.எப்.எஸ். பணியிடங்களும் காலியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த காலியிடங்களில் தமிழ்நாட்டில் 51 ஐ.ஏ.எஸ். பணியிடங்கள் காலியாக உள்ளன. இதுபோல் ஐ.பி.எஸ். பணியிடங்களில் 34-ம், ஐ.எப்.எஸ். பணியிடங்களில் 50-ம் காலியாக உள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் (2020-2024) நியமனம் செய்யப்பட்ட இந்த பணியிடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோர் அதிகம் உள்ளனர். ஐ.ஏ.எஸ். பதவியில் இதர பிற்படுத்தப்பட்டோர் 245 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் 135 பேரும், பழங்குடியினரில் 67 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஐ.பி.எஸ். பதவியில் இதர பிற்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை 255 ஆக உள்ளது.

தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 141 ஆகவும், பழங்குடியினரின் எண்ணிக்கை 71 ஆகவும் உள்ளது. ஐ.எப்.எஸ். பணியிடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோர் 231 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் 95 பேரும், பழங்குடியினர் 48 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். சதவீத கணக்கில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளில் இதர பிற்படுத்தப்பட்டோர் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர் என தெரியவந்துள்ளது.

# புதுச்சேரி பேரவைத் தேர்தலில் ம.நீ.ம.வுக்கு டார்ச்லைட் சின்னம் ஒதுக்கீடு

**புதுச்சேரி, பிப்.19:**

தமிழ்நாடு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சட்டப் பேரவைத் தேர்தலை நடத்துவதற்கான தீவிர ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி 11ஆம் தேதி 7 உறுப்பினர்கள் கொண்ட துணைத் தேர்தல் ஆணையர்கள் குழு தேர்தல் தயாரிப்புப் பணிகளை ஆய்வு செய்வதற்காக சென்னை விமான நிலையம் வந்தது. இந்தக் குழுவில் பன்வர் பிரகாஷ், மணீஷ் கர்க், பவன் குமார் சர்மா, சஞ்சய் குமார், ஆஷிஷ் கோயல் ஆகியோர் உள்பட இதர உயர் அதிகாரிகள் வந்திருந்தனர். ஏற்கெனவே அண்மை யில் ம.நீ.ம.வுக்கு தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் பொதுச் சின்னம் ஒதுக்கும் வகையில் டார்ச் லைட் சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கியிருந்தது.

இதைத் தொடர்ந்து, புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தலிலும் அக்கட்சிக்கு பொதுச் சின்னமாக டார்ச் லைட் சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

புதுச்சேரியில் நடைபெற வுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களது கட்சி மூலம் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு உரிய விதிகளின்கீழ் சின்னம் ஒதுக்கக் கோரியிருந்த மக்கள் நீதி மய்யம் போன்ற பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் மனு தேர்தல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் இச்சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# அதிகரிக்கும் 'டீப்ஃபேக்': வலுவான ஒழுங்குமுறை அவசியம் - மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்

**புதுடெல்லி, பிப்.19:**

'டீப்ஃபேக்' எனப்படும் போலி சித்தரிப்புகள் அதிகரித்து வருகின்றன; இப்பிரச்னையில் இருந்து குழந்தைகள் உள்பட நமது சமூகத்தைப் பாதுகாக்க வலுவான ஒழுங்குமுறை அவசியம் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சா் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தாா்.

ஏற்கெனவே உள்ள பாதுகாப்பு அம்சங்களுடன் கூடுதல் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து மத்திய அரசுத் தரப்பில் துறைசாா் ஆலோசனைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவா் குறிப்பிட்டாா். டில்லியில் நடைபெற்றுவரும் சாவதேச செயற்கை நுண்ணறிவு தாக்கம் உச்சிமாநாட்டையொட்டி, செய்தியாளா்களுக்கு செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியில் மத்திய அமைச்சா அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:




டீப்ஃபேக் பிரச்னை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதன் பாதிப்புகளில் இருந்து குழந்தைகள் மற்றும் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். இப்பிரச்னையை எதிா்கொள்ள மிக வலுவான ஒழுங்குமுறை தேவை. இந்த விவகாரத்தில், நாடாளுமன்ற நிலைக் குழுவும் விரிவாக ஆய்வு மேற்கொண்டுள்ளது. டீப்ஃபேக் மீதான கட்டுப்பாடுகளில் நாடாளுமன்றத்திலும் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவது அவசியம்.

டீப்ஃபேக் பிரச்னையை எதிா்கொள்ளவும், வயது அடிப்படையிலான கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்தும் மிகவும் பொருத்தமான வழிமுறையில் தீா்வுகாண்பதற்காக சமூக ஊடக நிறுவனங்களுடன் மத்திய அரசு விவாதித்து வருகிறது.

நெட்ஃபிளிக்ஸ், யூ-டியூப், எக்ஸ் என எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும், நமது சட்ட அமைப்புமுறை மற்றும் அரசமைப்புச் சட்டத்துக்கு கட்டுப்பட்டதாகும்.

சமூக ஊடக உள்ளடக்கங்களில் வயது அடிப்படையிலான கட்டுப்பாடுகளின் அவசியத்தை பல்வேறு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த விஷயத்தில், இந்தியா தனது முன்முயற்சியை ஏற்கெனவே தொடங்கியுள்ளத என்றார்..

# 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர்கள் பார்த்து எழுத அனுமதித்த 5 ஆசிரியர்கள் இடைநீக்கம்

**பீட், பிப்.19:**

மகாராஷ்டிர மாநிலம் பீட் மாவட்டத்தில் உள்ள ஒரு மையத்தில் 12-ஆம் வகுப்பு பொதுத் தோ்வில் மாணவா்களைப் பாா்த்து எழுத அனுமதித்த 5 ஆசிரியா்கள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனா். தோ்வு மையத்தை கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட ட்ரோன் மூலம் கண்காணித்தபோது, இந்த முறைகேடு கண்டறியப்பட்டது.

மகாராஷ்டிர மாநில கல்வி வாரிய பொதுத் தோ்வு கடந்த 10-ஆம் தேதி தொடங்கியது. பொதுத் தோ்வு தொடங்கிய முதல் நாளில் இந்த முறைகேடு நிகழ்ந்துள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: பொதுத் தோ்வில் மாணவா்கள் முறைகேடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கவும், தவறான கருத்தின் அடிப்படையில் மாணவா்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கிலும் தோ்வு மையங்களில் கண்காணிப்பு கேமரா



பொருத்தப்பட்ட ட்ரோன் மூலம் அதிகாரிகள் கண்காணிப்பை மேற்கொண்டனா். இதில், பீட் மாவட்டத்தில் அமைந்துள்ள 16 தோ்வு மையங்களில் மாணவா்கள் பெருமளவில் தோ்வை பாா்த்து எழுதியதும், அதை தோ்வு கண்காணிப்பாளா்களே (ஆசிரியா்கள்) அனுமதித்ததும் கண்டறியப்பட்டது. அதனடிப்படையில் 17 ஆசிரியா்கள் மீது காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆா்) பதிவு செய்யப்பட்டது.

இதில் லிம்பகணேஷில் உள்ள பாலசந்திர வித்யாலய பள்ளியைச் சோ்ந்த 5 ஆசிரியா்கள் மாணவா்கள் பாா்த்தெழுத உதவியது விசாரணையில் உறுதியானதைத் தொடா்ந்து, அவா்கள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனா். மற்ற 3 பள்ளிகளைச் சோ்ந்த 12 ஆசிரியா்களிடம் விசாரணை தொடா்ந்து வருகிறது. அவா்களும் பணியிடைநீக்கம் செய்யப்பட வாய்ப்புள்ளது. அதன்பிறகு, இவா்கள் அனைவரிடமும் அடுத்தகட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கைமேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தனா்.

# சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட் நினைவிடங்களை தகர்த்து வரும் சிஆர்பிஎப்

**ராய்ப்பூர், பிப்.19:**

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா 2026-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிக்குள் நாட்டில் நக்சல் தீவிர வாதத்தை முற்றிலும் அகற்ற இலக்கு நிர்ணயித்துள்ளார். இதில் குறிப்பிடத்தக்க வெற்றியை அரசு பெற்றுள்ளது.

கடந்த 2019-ல் சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் 61 மாவட்டங்களில் நக்சலைட் வன்முறை பதிவானது. இது இந்த ஆண்டு ஜனவரியில் சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்டில் 5 மாவட்டங்களாக சுருங்கியுள்ளது.

சரண் அடையும் நக்சலைட்களுக்கான மறுவாழ்வு கொள்கையும் பலன் அளித்து வருவதால் நக்சலிஸம் இல்லாத நிலையை நோக்கி நாடு நகர்ந்து வருகிறது. இந்நிலையில் நக்சலைட்களுக்கு எதிரான போரில் தற்போது நக்சலைட் நினைவிடங்களை சிஆர்பிஎப் இடித்து அகற்றி வருகிறது. இந்த நினைவிடங்கள் பெரும்பாலும் உயிரிழந்த நக்சலைட் தலைவர்கள் மற்றும் கமாண்டர்களுக்காக கட்டப்பட்டவை. இதுகுறித்து சிஆர்பிஎப் வட்டாரங்கள் கூறுகையில், "நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து ராய்ப்பூரில் கடந்த பிப்ரவரி 8-ம் தேதி மத்திய அமைச்சர் அமித் ஷா மறு ஆய்வு செய்தார். அப்போது அவரது வழிகாட்டுதலுக்கு இணங்க சத்தீஸ்கரில் கடந்த 15 நாட்களில் சுக்மா, பிஜாப்பூர் மற்றும் பஸ்தார் முழுவதும் 53 நினைவிடங்களை சிஆர்பிஎப் இடித்து அகற்றியுள்ளது. உள்ளூர் மக்கள் உதவியுடன் பிப்ரவரி இறுதிக்குள் அனைத்து நினைவிடங்களையும் இடிக்க சிஆர்பிஎப் இலக்கு நிர்ணயித்துள்ளது. மக்கள் மத்தியில் அச்சத்தை போக்கி நக்சல் போராட்டத்துக்கான அடையாளத்தை அழிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று தெரிவித்தன.

# பெங்களூருவில் ரூ.21.5 கோடி போதைப் பொருட்கள் பறிமுதல்: 3 வெளிநாட்டினர் உட்பட 15 பேர் கைது



**பெங்களூரு, பிப்.19:**

பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து அம்ருதஹள்ளி, ஹெப்பகுடி, ஜே.பி.நகர், கே.ஜி.ஹள்ளி உள்ளிட்ட இடங்களில் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அதில் 9.46 கிலோ ஹைட்ரோ கஞ்சா, 34 கிலோ கஞ்சா, 5.67 கிலோ எம்டிஎம்ஏ, 131 கிராம் கோகைன், 29 எல்எஸ்டி மாத்திரைகள், 27 கிராம் எல்எஸ்டி கட்டிகள், 462 மில்லி ஹாஷிஷ் எண்ணெய் உள்ளிட்ட போதைப் பொருட்கள் சிக்கின. கடத்தல்காரர்களிடம் இருந்து 2 கார், 3 இரு சக்கர வாகனம், 6 செல்போன்கள், ரூ.24 ஆயிரத்து 500 ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தலில் ஈடுபட்ட 15 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் 3 பேர் வெளிநாட்டினர். 15 பேர் மீதும் போதைப் பொருள் தடுப்பு சட்ட பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.21.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணையில், கல்லூரி மாணவர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்காக வெளிநாட்டில் இருந்து இவற்றை வாங்கியது தெரியவந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பால் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி அதிகரிக்கும்: ராஜ்நாத் சிங்

**பெங்களூரு, பிப்.19:**

எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பால் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும், பாதுகாப்புத் துறை ஏற்றுமதி அதிகரிக்கும் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் (பிப். 17) தெரிவித்தார்.

கர்நாடகத்தின் வெமகல் பகுதியில் டாடா குழுமத்தின் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம் லிமிடெட் மற்றும் ஏர்பஸ் இணைந்து தயாரிக்கும், எச் 125 ஹெலிகாப்டர் உற்பத்தியின் இறுதி அசெம்ளியை பிரதமர் நரேந்திர மோடியும் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானும் இணைந்து




தொடக்கி வைத்தனர்.

இந்த எச் 125 ஹெலிகாப்டர், பொது பாதுகாப்பு மற்றும் ராணுவத்தில் இலகு ரக ஹெலிகாப்டர்களின் தேவையை பூர்த்தி செய்யும். எவரெஸ்ட் சிகரங்களில் ராணுவ நடவடிக்கைகளின் போது எச் 125 ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்படும்.

டாடாவும் ஏர்பஸும் இணைந்து ராணுவ நடவடிக்கைகளுக்கான பிரத்யேகமாக எச் 125எம் என்ற இலகு ரக ஹெலிகாப்டர்களை தயாரித்து வருகிறது. இவை எச் 125 ஹெலிகாப்டர்களில் இருந்து சற்று மாறுபட்டதாக ராணுவ சூழல்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

கர்நாடகத்தில் எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பை பிரதமர் நரேந்திர மோடியும் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானும் இணைந்து மும்பையில் இருந்தவாரு காணொலி வாயிலாகத் தொடக்கி வைத்தனர்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பிரான்ஸ் பாதுகாப்புத் துறை கேத்தரின் வௌட்ரினும் கர்நாடகத்தில் நடந்த தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொணடனர்.

நிகழ்ச்சியில் ராஜ்நாத் சிங் பேசியதாவது: ''எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்புக்கான முதலீடு ரூ. 1000 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. திறன் வாய்ந்த இளம் தலைமுறையினருக்காக நேரடி மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். தற்போது எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பானது, பாதுகாப்புத்துறைஏற்றுமதியை புதிய மைல்கல்லை நோக்கி எடுத்துச் செல்லும் என்றார்.

## பிரிட்டனில் வேலையின்மை 5.2 சதவீதமாக உயர்வு

**காசா, பிப்.19:**

பிரிட்டனில்வேலையின்மை5.2சதவீதமாகஉயர்ந்துள்ளது. இது கடந்த ஐந்து ஆண்டுகள் இருந்ததை விட அதிகமாகும். தற்போது பிரிட்டனில் வேலை இல்லாதவர்களின் மொத்த எண்ணிக்கை 18.83 லட்சத்தை எட்டியுள்ளது. வேலை தேடாத அல்லது வேலை செய்ய முடியாத நிலை யில் உள்ளவர்களின் (ECONOMIC INACTIVITY) அளவு 20.8 சதவீதமாக உள்ளது. ஏற்கெனவே பிரிட்டன் மத்திய வங்கியான 'பாங்க் ஆஃப் இங்கிலாந்து', தொழிலாளர் சந்தை தளர்வடைந்துள்ளதாக எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பேச்சுவார்த்தைக்கு வருவது நல்லது : உக்ரைனுக்கு டிரம்ப் எச்சரிக்கை

உக்ரைன் விரைவில் பேச்சுவார்த்தைக்கு வருவது நல்லது என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டு வர தொடர் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரு கின்றன. ஏற்கெனவே ஐக்கிய அரபு அமீரகத்தில் இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்நிலையில் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ரஷ்யா,உக்ரைன், அமெரிக்க அதிகாரிகள் பங்கேற்புடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளநிலையில் டிரம்ப் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கை : இஸ்லாமிய நாடுகள் கண்டனம்

பாலஸ்தீனர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் புதிய திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்நடவடிக்கை இரு நாட்டுத் தீர்வு என்ற கொள்கையைச் சீர்குலைக்கும். சுதந்திர பாலஸ்தீனத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பையே இல்லாமல் செய்யும் என சவூதி அரேபியா, ஜோர்டான், ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், இந்தோனேசியா, பாகிஸ்தான், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகள் கடுமையாகக் கண்டித்துள்ளன. 1967 ஜூன் 4 ஆம் தேதி இருந்த எல்லைகளின்படி கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட ஒரு சுதந்திரமான பாலஸ்தீன நாட்டை உருவாக்குவது தான் தீர்வு எனவும் அவை தெரிவித்துள்ளன.

## தொடர் பயங்கரவாதத் தாக்குதல்கள் : பாகிஸ்தானில் 14 பேர் பலி

பாகிஸ்தானில் ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதல்களில் 11 பாதுகாப்புப் படை வீரர்கள் உள்பட 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கைபர் பக்துன்குவா மாகாணத்தின் பஜாவூர் மாவட்டத்தில் வெடிகுண்டுகள் நிரப்பிய வாகனத்தை பயங்கரவாதி வெடிக்கச் செய்ததில் 9 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, பன்னு நகரில் நடைபெற்ற மற்றொரு வெடி குண்டு தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டனர். மற்றொரு இடத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிராக ராணு வம் நடத்திய தாக்குதலில் 3 வீரர்கள் மற்றும் 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## இந்தோனேசியாவில் எரிமலை திடீர் வெடிப்பு, 4 நிலநடுக்கம் பதிவு: மக்களுக்கு எச்சரிக்கை

**சுமத்ரா, பிப்.19:**

இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ராவில் உள்ள மராபி எரிமலை இன்று திடீரென வெடித்தது. இது எச்சரிக்கை விடும் வகையில் மிக அதிக உயரத்திற்கு எரிமலை சாம்பலை வெளியேற்றி உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனுடன், 4 நிலநடுக்கங்களும் ஏற்பட்டு உள்ளன. 1.6 முதல் 3.6 வினாடிகள் வரையிலான இடைவெளியில் 14 முதல் 36 வினாடிகள் வரையிலான கால அளவில் அவை ஏற்பட்டன. எனினும், எந்தளவு உயரத்திற்கு சாம்பல் புகையை வெளியேற்றியது என்பது பற்றிய உடனடி தகவல் வெளியிடப்படவில்லை.

கடந்த ஜனவரியிலும் இதேபோன்று வெடிப்பு ஏற்பட்டது. அப்போது அதில் இருந்து 1,600 மீட்டர் உயரத்திற்கு சாம்பல் புகை வெளியேறியது. கடந்த வாரத்தில் ஒரு முறை இந்த எரிமலையில் வெடிப்பு ஏற்பட்டது. இந்தோனேசியாவில் 2026-ம் ஆண்டில் நாடு முழுவதும் மொத்தம் 660 எரிமலை வெடிப்புகள் ஏற்பட்டு உள்ளன என்றும் அதில் கிழக்கு ஜாவாவில் உள்ள செமரு எரிமலை அதிக அளவாக 348 முறையும், மராபி எரிமலை 18 முறையும் வெடித்து உள்ளது. இதனால், அதனை சுற்றிய 3 கி.மீ. தொலைவுக்குள் மக்கள் யாரும் செல்ல வேண்டாம் என் எச்சரிக்கப்பட்டு உள்ளது.

# எப்ஸ்டீன் கோப்புகள்: மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள்! ஐ.நா. அறிக்கை!

**நியூயார்க், பிப்.19:**




அமெரிக்காவில் சிறுமிகளைக் கடத்திப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதற்காக, கைதான பெரும் பணக்காரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன் சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து, எப்ஸ்டீனுடன் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், தொழிலதிபர்கள், பிரபலங்கள் உள்ளிட்டோர் உரையாடிய மின்னஞ்சல்கள், பகிர்ந்த விடியோக்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை வெளியிடுவதற்கு கடந்த 2025 நவம்பரில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது.

இதையடுத்து, கடந்த ஜன.30 அன்று 35 லட்சப் பக்கங்களைக் கொண்ட எப்ஸ்டீன் கோப்புகளை அமெரிக்க நீதித்துறை வெளியிட்டது. அந்தக் கோப்புகளில் உள்ளவை அனைத்தும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியுள்ளன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முதல் உலகத் தலைவர்கள், தொழிலதிபர்கள் என ஆயிரக்கணக்கானோருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதுதொடர்பாக ஆய்வு செய்த ஐ.நா.வின் நிபுணர்கள் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் சித்திரவதை, மனிதாபிமானமற்ற வன்கொடுமைகள் போன்றவை சர்வதேச சட்டத்தின் கீழ் மிகக் கடுமையான குற்றங்களுக்கு கீழ் வருகின்றன. பல குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் சட்ட வரம்புக்குள் வருகின்றன. அனைத்து தகுதிவாய்ந்த தேசிய மற்றும் சர்வதேச நீதிமன்றங்களிலும் இந்த கொடுமைகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும்.

இயற்கைக்கு மிகவும் மோசமான இதுபோன்ற குற்றங்கள் இவ்வளவு காலமாக எவ்வாறு நடந்திருக்க முடியும் என்பது குறித்து சுயாதீனமான, பாரபட்சமற்ற முழுமையான விசாரணை தேவை.

குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான நபர்கள், ராஜினாமா செய்வது மட்டும் பொறுப்புக்கூறலுக்கு போதுமானதாக இருக்காது. குற்றவாளிகளுக்கு எதிராக அரசுகள் தீர்க்கமாக செயல்பட வேண்டியது அவசியம். சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களோ, சக்திவாய்ந்தவர்களோ யாரும் இல்லை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏஐ-யால் ஐடி துறை அழியாது: அடித்து சொல்லும் இன்போசிஸ் இணை நிறுவனர்

**நியூயார்க், பிப்.19:**




செயற்கை நுண்ணறிவு எனப்படும் ஏஐ கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு அசுர வளர்ச்சி பெற்றுள்ளது.

தகவல் தொழில் நுட்ப பெரும் புரட்சியையே ஏஐ ஏற்படுத்தியுள்ள நிலையில், மனிதர்களின் பல வேலைகளுக்கு ஏஐ ஆப்பு அடித்துவிடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். ஐடி துறை, பத்திரிகை, என பலதுறைகளிலும் வேலை இழப்புகள் ஏற்படும் என்று எச்சரித்து வருகிறார்கள்.

ஏஐ தாக்கம் காரணமாக அமேசான், ஆரக்கிள் என உலகின் முன்னணி நிறுவனங்களும் ஆட்குறைப்பு பணியிலும் ஈடுபட்டு வருவதால் ஐடி துறை ஊழியர்கள் இடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐடி ஊழியர்கள் நிம்மதி அடையும் விதமாக ஒரு தகவலை இன்போசிஸ் இணை நிறுவனர் கூறியுள்ளார்.

அதாவது, ஏஐ-யின் தாக்கத்தால், இனி வெறும் கம்ப்யூட்டர் கோடிங் எழுதுவது மட்டும் ஒரு சாப்ட்வேர் இன்ஜினியரின் வேலையாக இருக்காது என்று இன்போசிஸ் இணை நிறுவனர் நந்தன் நிலேகனி தெரிவித்துள்ளார்.

இது நந்தன் நீல்கேனி இது தொடபாக கூறுகையில், "ஒரு சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பது மற்றும் ஏஐ-யை எப்படிச் சரியாகப் பயன்படுத்துவது என்பதிலேயே இனி இன்ஜினியர்கள் கவனம் செலுத்த வேண்டும். ஏஐ செய்யும் வேலையை விட, மனிதர்களின் ஆக்கப்பூர்வமான சிந்தனைக்கும், முடிவெடுக்கும் திறனுக்குமே இனி அதிக மதிப்பு இருக்கும்" என்றார்.

# மத்திய கிழக்கில் போர் விமானங்களை குவிக்கும் அமெரிக்கா: போர் பதற்றம் அதிகரிப்பு

**டார்பூர், பிப்.19:**



அமெரிக்காவும் ஈரானுக்கும் இடையே பகை நீடித்து வருகிறது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சிப்பதாக அமெரிக்காவும், இஸ்ரேலும் குற்றம்சாட்டி வருகின்றன. மேலும் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை கைவிட வேண்டும். இதுதொடர்பாக அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என்று டிரம்ப் கூறி வருகிறார்.

இந்த ஒப்பந்தத்தில் ஈரானை கையெழுத்திட வைக்க அமெரிக்க அதிபர் டிரம்ப், அனைத்து வகையிலும் அழுத்தம் கொடுத்து வருகிறார். ஆரம்பத்தில் பிடிகொடுக்காமல் இருந்த ஈரான், ஒரு கட்டத்தில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டது. இருநாடுகளிடையே ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்த சூழலில், கடந்த 24 மணிநேரத்தில் எப்22, எப்35, எப்16 உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட அதிநவீன போர் விமானங்களை, மத்திய கிழக்கு பகுதிகளில் அமெரிக்கா குவித்து வருகிறது.

மேலும், விமானங்களுக்கு ஏற்கனவே, யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர்.போர்டு என்ற விமானம் தாங்கி கப்பல், கரீபியன் பகுதியிலிருந்து தற்போது மத்திய அட்லாண்டிக் பகுதியில் மத்திய கிழக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில், அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அங்கு போர் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

ஈரானுடனான பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்து வரும் நிலையில், மற்றொரு புறம் ராணுவ பலத்தை ஈரான் அமைந்துள்ள மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்கா அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கலிபோர்னியா பனிச்சரிவு: சிக்கிய 15 பேரில் 6 பேர் மீட்பு 9 பேர் மாயம்

**நியூயார்க், பிப்.19:**

அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியாவின் காஸில் பீக் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் 15 பேர் சிக்கி கொண்டனர். எனினும், பனிக்கட்டிகளுக்கும், பனிச்சரிவுகளுக்கும் மத்தியில் அவர்கள் தவித்து வந்தனர்.



அவர்களை மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டனர். இதில் மீட்கப்பட்ட 6 பேரில், 2 பேர் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனை நிவாடா கவுன்டியின் செய்தி தொடர்பாளர் ஆஷ்லே குவாத்ரோஸ் தெரிவித்து உள்ளார்.

எனினும், காணாமல் போன மீதமுள்ள 9 பேரை தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், சக்தி வாய்ந்த பனிப்புயல் தாக்கமும் அந்த பகுதியில் காணப்படுகிறது. இதனால், மீட்பு பணியில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. ஏற்கனவே பல மணிநேர போராட்டத்திற்கு பின்னரே 6 பேர் மீட்கப்பட்டனர். இதனை தொடர்ந்து மீதமுள்ளவர்களை மீட்கும் பணியும் பாதிக்கப்பட்டு உள்ளது.

## ரஷ்ய தாக்குதல்...மூடப்பட்ட போலந்து விமான நிலையங்கள்

**போலந்து, பிப்.19:**

ராணுவ நடவடிக்கைகள் காரணமாக போலந்தில் உள்ள செஷோவ் மற்றும் லூப்லின் விமான நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. ரஷ்யா உக்ரைன் மீது நடத்தி வரும் தாக்குதல்கள் காரணமாக, போலந்தில் உள்ள இரண்டு விமான நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. ரஷ்யாவின் விமானபடை உக்ரைன் பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருவதால் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போலந்து வான்வெளியில் ராணுவ கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. இதன் காரணமாக செஷோவ் மற்றும் லூப்லின் விமானநிலையங்கள் சிறிது நேரம் முடக்கப்பட்டன. பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தபிறகு இரு விமான நிலையங்களும் வழக்கம்போல் செயல்பட தொடங்கின.

## பேச்சு வார்த்தை சூழலில் அமெரிக்காவை எச்சரித்த ஈரான்

**தெஹ்ரான், பிப்.19:**

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே கடந்த ஆண்டு ஜூன் முதல் பதற்ற நிலை காணப்படுகிறது. எந்த நேரமும் போர் நடக்க கூடும் என்ற அச்சம் நிறைந்த சூழல் எழுந்தது.

எனினும், அதனை பேச்சுவார்த்தை வழியே தீர்த்து கொள்ள முடிவாகி உள்ளது. சமீபத்திய ஈரான் அரசுக்கு எதிரான போராட்டத்தின்போது உள்நாட்டில் ஈரானியர்கள் பலர் உயிரிழந்தனர். அப்போது டிரம்ப் கடுமையாக எச்சரித்ததும் பரபரப்பாக பார்க்கப்பட்டது.

## உக்ரைன் - ரஷியா போர் முடிவுக்கு வருமா? சுவிட்சர்லாந்தில் மீண்டும் பேச்சுவார்த்தை

**வாஷிங்டன், பிப்.19:**

உக்ரைன் , ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 454வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். போர் நிறுத்தம் தொடர்பாக ஏற்கனவே பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், ஒருசில நிபந்தனைகளுக்கு இரு நாடுகளும் ஒப்புக்கொள்ளாததால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அமெரிக்கா முயற்சியால் மீண்டும் ரஷியா, உக்ரைன் இடையே இன்று மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவாவில் இந்த பேச்சுவார்த்தை தொடங்கி நடைபெற்று வருகிறது. இன்றும், நாளையும் 2 நாட்கள் நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு சுமார் 4 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உக்ரைன், ரஷியா இடையேயான போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குடியேறிகளை 'வேட்டையாடும்' திட்டம்: பெரும் சிறை முகாம் ஆகிறதா அமெரிக்கா?

**வாஷிங்டன், பிப்.19:**

அமெரிக்காவில் குடியேற்றக் கொள்கைகளை கடுமையாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, அதிபர் டொனால்டு ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் நாடு முழுவதும் மிகப் பெரிய குடியேற்றத் தடுப்பு முகாம்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக 'தி இன்டெர்செப்ட்' என்ற ஊடகத்தில் வெளியாகியுள்ள செய்திக் கட்டுரை பல திடுக்கிடும் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளது. அதன்படி, தற்போது சுமார் 70,000 குடியேறிகள் சிறை முகாம்களில் உள்ளனர். இதனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், ஆயிரக்கணக்கானவர்களை தங்க வைக்கும் திறன் கொண்ட பெரிய கிடங்குகளை (WAREHOUSES) மாற்றி சிறை முகாம்களை உருவாக்க ட்ரம்ப் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அமெரிக்க உள்துறை பாதுகாப்புத் துறை (DHS) மற்றும் குடியேற்ற, சுங்க அமலாக்க நிறுவனம் (ICE) இணைந்து, நாடு முழுவதும் பல தொழிற்துறை கட்டிடங்களை வாங்கி சிறை முகாம்களாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளன. இதற்காக பல்லாயிரக்கணக்கான கோடி டாலர்கள் செலவிடப்படவுள்ளதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இந்தத் திட்டம் முழுமையாக செயல்பட்டால், அவை அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய சிறை முகாம்களாக மாறும் அபாயம் இருப்பதாக குடியேற்ற உரிமைகள் ஆதரவாளர்கள் எச்சரிக்கின்றனர். கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஆவணங்களின்படி, குடியேற்ற மற்றும் சுங்க அமலாக்கத் துறை நாடு முழுவதும் கிடங்குகளைப் பெறுவதற்கும், கிட்டத்தட்ட 1,00,000 படுக்கைகளை மொத்தமாக வைத்திருக்கும் வகையில், அவற்றை மறுசீரமைப்பதற்கும் 38.3 பில்லியன் டாலர்கள் செலவிடவிருக்கிறது. குறிப்பாக, CORECIVIC மற்றும் GEO GROUP போன்ற தனியார் சிறை நிறுவனங்கள் இந்த திட்டத்தால் பெரிய அளவில் லாபம் அடையும் நிலையில் உள்ளன. முதலீட்டாளர்களுடன் நடந்த கூட்டங்களில், ஐசிஇ (ICE) காவலில் உள்ளவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு வெளிப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. அதேபோல், கண்காணிப்பு தொழில்நுட்பத்தில் ஈடுபடும் PALANTIR TECHNOLOGIES போன்ற நிறுவனங்களும் அரசின் ஒப்பந்தங்கள் மூலம் பலனடையும் வாய்ப்பு உள்ளது. இந்நிலையில், சில மாகாணங்களில் பொதுமக்கள் எதிர்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக மின்னசோட்டாவில் ஐசிஇ நடவடிக்கைகள் குறைக்கப்பட்டதாக அதிகாரிகள் அறிவித்திருந்தாலும், மொத்த அளவில் நாடு முழுவதும் கைது மற்றும் நாடு கடத்தல் நடவடிக்கைகள் தொடரும் என நிர்வாகம் தெளிவுபடுத்தியுள்ளது. சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட 'ONE BIG BEAUTIFUL BILL ACT' என்ற சட்டத்தின் மூலம் ஐசிஇ-க்கு பல ஆண்டுகளுக்கு பல்லாயிரம் கோடி டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால், குடியேற்றக் கட்டுப்பாட்டு அமைப்பை விரிவுபடுத்த அரசுக்கு நிதி பற்றாக்குறை இல்லை என்பது தெளிவாகிறது. ஆனால், பொருளாதார விளைவுகள் குறித்து கவலை எழுந்துள்ளது.